மாலை: 51 மணி: 3 மார்ச் 2009 விலை ரூ.10

திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு



தமிழகத்தின் ஆலயங்கள் தங்கமாகும் காலங்கள்!

பொன்னான வாய்ப்பு!

ஸ்மார்ட் கிரியேஷன்ஸ் பொன் ஆலயம் வழங்கும்

24கேரட் கோல்டு கோட்டிங்!

அதிநவீனம், அற்புதம், உன்னத NTGD லண்டன் தொழில்நுட்பம்!

தொடர்புக்கு : K.S.S. நாராயணன் 98848 77722

- சிக்கனமான முறை
- நீடித்து நிலைக்கும் பொலிவு
- தமிழக அறநிலையத்துறையின் அங்கீகாரம்
- தங்கத்தின் அளவை துல்லியமாக கணக்கிடலாம்

கலசங்கள் — உத்தேச மதிப்பீடு! உண்மை ஒப்பீடு!

அளவு அடிகளில்	பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங்	ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம்	உத்தேச சேமிப்பு
1	35,000	8,000	27,000
2	2,19,000	48,000	1,71,000
3	4,66,000	1,00,000	3,66,000
4	6,64,000	1,45,000	5,19,000
5	9,77,000	2,14,000	7,63,000
7	18,00,000	3,94,000	14,06,000

கொடி மரம் — உத்தேச மதிப்பீடு! உண்மை ஒப்பீடு!

அளவு அடிகளில்	பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங்	ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம்	உத்தேச சேமிப்பு
9	23 ல	6 ல	17 ல
12	31 ல	8 ல	23 ல
20	52 ல	14 ல	38 ல
30	78 ல	21 ல	57 ல
40	104 ல	27 ல	77 ல

கவசம்

அளவு	பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங்	ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம்	உத்தேச சேமிப்பு
12"x 9"	28,000	10,000	18,000
15"x12"	47,000	16,000	31,000
24"x18"	1,12,000	39,000	73,000
36"x24"	2,25,000	78,000	1,47,000

தங்கரதம்

அளவு	பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங்	ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம்	உத்தேச சேமிப்பு
8	69 ல	15 ல	54 ல
9	84 ல	18 ல	66 ல
10	99 ல	22 ல	77 ல
12	1,48 ல	33 ல	115 ல

தங்கத்தேர், கொடிமரம், கலசங்கள், விமானம், கவசங்கள், பிரபை, மூலஸ்தான கதவுகள்

பித்தளை, தாமிரம், வெள்ளி மற்றும் பஞ்சலோகத்தில் 24கேரட் கோல்ட் கோட்டிங் சிறப்பாக செய்து தர இயலும்

SP 15, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை - 600 058. Tel : 044 2833 2655/4205 991

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு: 2040 பங்குனிமாதம்
மாலை 51. மணி 3 மார்ச் 2009

அன்பார்ந்த வாசகப்பெருமக்களே!

வணக்கம்.

வசந்த காலத்தின் இதமான சூழ்நிலையில் பங்குனி மாதம் தொடங்குகிறது. இது தெய்வத் திருமணங்கள் நடைபெறும் மாதமாகத் திகழ்கிறது. இம்மாதத்தில் அன்பர்கள் திருக்கோயில்களில் சிவ–பார்வதியார், முருகன்–வள்ளி, தாயார்–திருமால், மன்மதன்–ரதி ஆகியோரின் திருமண விழாக்களைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

இம்மாத இதழ் அருள்மிகு கற்பகவல்லி உடனாய கபாலீசுவரப் பெருமானின் திருக்கோலத்தைத் தாங்கி வெளிவருகிறது. உள்முகப்பில் திருமயிலை சிங்காரவேலனைக் கண்டு மகிழ்கிறோம். பல்கிப் பெருகிப் பலன் தரும் உத்திரத்தின் சிறப்புகளை முதல் கட்டுரை விளக்குகிறது. இறைவனின் அருளில் திளைத்து மகிழும் தன்மை எதுவென்று விளக்குகிறார். "அருளியல்" கட்டுரையில் டாக்டர். திருமதி. ராதா. தியாகராஜன் அவர்கள்.

மலிவிழா மூதூராக அன்றும், இன்றும் திகழும் மயிலாப்பூர் பங்குனிப் பெருந்திருவிழாவின் சிறப்புகளும், அங்கம்பூம்பாவை விழாவின் ஐதீக விளக்கங்களும் இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளன.

தொண்டர் தம் நாயகமாம் சண்டீசப் பெருமானின் பெருமைகளை மன்னார்குடி சுகுமாரனின் கட்டுரையும், தொண்டர்களின் அடியில் தம்மை இருக்கப் பண்ணுமாறு வேண்டும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களை பரந்தாமனார் கட்டுரையும் இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் உலாவில் பிரமன் வழிபட்டுப் பேறு பெற்ற திருத்தலமான வழுவூரின் சிறப்புகளை "பேரருள் நல்கும் பிரம்மபுரீசுவரமான வழுவூர்" எனும் கட்டுரையில் வண்ணப் படங்களுடன் வழங்கியுள்ளார் பனையபுரம் அதியமான். தொடர்ந்து ஆதிசேது என்று கொண்டாடப்படும் திருப்புல்லாணி திவ்யதேசத்தின் சிறப்புகளைக் காண்கிறோம். பாம்பணையில் துயிலும் பரமனை அதில் கண்டு மகிழலாம்.

நாம் நல்லதையே நினைக்க வேண்டும் என்று இதமாகக் கூறும் வகையில் பகரப்பட்டுள்ள "கெடுவான் கேடு நினைப்பான்" என்ற வாரியார் சுவாமிகளின் அறிவுரையும், சென்ற நூற்றாண்டின் தலைசிறந்த தெய்வீக அருளாளராகத் திகழ்ந்த அருள்ஞானப் புலவர் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளின் அருமை பெருமைகளை வழங்கும் கட்டுரையும் இவ்விதழில் வெளிவந்துள்ளது.

தழைத்த பாதிரிப்புலியூர் என்று போற்றப்படும் கடலூர் திருப்பாதிரிப் புலியூர் சிவாலயத்தின் பெருமைகளை வண்ணப்படங்களுடன் சிறப்புக் கட்டுரையில் காண்கிறோம். வழக்கம் போல் உடையவர் உலா வருகிறார். இந்த அரிய கட்டுரைகளின் சிறப்பை அறிந்து மகிழத் தங்களை அழைக்கிறேன்.

இந்த இனிய வேளையில் கற்பகவல்லி உடனாய கபாலீசுவரப் பெருமானிடம், உலகில் வளமும் வாழ்வும் பொங்கிப் பெருக அருள்புரியவும் எல்லோரையும் எல்லாமும் பெற்று இன்பமுடன் வாழ்விக்கவும் வேண்டுகிறேன்.

இந்துசமய அறநிலையத்துறை
119. உத்தமர் காந்தி சாலை,
சென்னை – 600 034.

(து. பிச்சாண்டி, இ.ஆ.ப.,)
முதன்மை செயலர்/ ஆணையர்

குறளோவியம்

கழனியோரத்தில் தலையில் முண்டாசு கட்டியவாறு கார்மேகம் உட்கார்ந்திருந்தான். கட்டுக்கோப்பான உடல் அமைப்புக் கொண்டவன் அவன். அவனருகே சிறிய வாய்க்கால் ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. அந்த வாய்க்கால், நீரால் நிரம்பி வழிந்தவாறும் இருந்தது. எனினும் கார்மேகத்தின் எதிரேயிருந்த அவனது கழனி, வெடித்துக் காய்ந்து கிடந்தது. அவன் கழனியை அடுத்துள்ள மற்றவர் கழனிகளில் வாய்க்காலில் மடைகோலித் தங்கள் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தனர். கார்மேகம் தனியாக உட்கார்ந்திருப்பதைக் கண்ட அந்த ஊர்ப்பெரியவர் அவனிடம் வந்தார். கழனியில் வேலை செய்த அவரது மேனியெங்கும் சேறு, சந்தனம் போல் பூசப்பட்டிருந்தது. பெரியவர், கார்மேகத்தைப் பார்த்துக் கேட்டார்; "என்ன தம்பீ! வாட்டமுடன் இருக்கிறாய்? உனக்குத் திருமணம் என்றார்களே; எப்போது?" என்று! கார்மேகம், பெரியவரிடம் சலித்துக் கொண்டே பதில் சொன்னான்: "மணமாவது மண்ணாங்கட்டியாவது! அதற்கெல்லாம் செலவுக்குப் பொருள் வேண்டாமா? என்னிடம் என்ன இருக்கிறது?" இந்தப் பதிலைக் கேட்ட பெரியவர் "அய்யோ பாவம்! இல்வாழ்வில் ஈடுபட வேண்டிய இளமைப்பருவம் இன்பங்கள் துய்க்க வேண்டிய வசந்த காலம் – அந்த வாய்ப்பைப் பெற முடியாமல் உன்னை வறுமை தடுத்து விட்டதே!" என்று கவலையைத் தெரிவித்தார். அப்போது யாரோ கலகலவென்று சிரிக்கும் ஒலி கேட்டது. பெரியவரும், இளைஞனும் திரும்பிப் பார்த்தனர். சுற்றுமுற்றும் நோக்கினர். யாரையும் காண முடியவில்லை. ஆனாலும் சிரிப்பொலி அடங்கவில்லை. அது ஒரு பெண்ணின் சிரிப்புத்தான். ஆனால் யார் அந்தப் பெண்? இருவரும் திகைத்துப் போயினர். பெரியவர், துணிவை வரவழைத்துக்கொண்டு "யாரது? யார் சிரிப்பது?" என்று உரக்கக் கேட்டார். பதில் பிறந்தது.

"நான்தான் நிலமகள் சிரிக்கிறேன். நான் எனக்குள்ளாகவே சிரித்துக்கொள்கிறேன். ஏன் தெரியுமா? பெரியவரே! நான் சிரித்த காரணத்தைச் சொல்லட்டுமா? இந்த முதிர்ந்த வயதிலும் உழைப்பால் உயர்கிறீர் நீர். உமது வியர்வைத் துளிகள், நெல் மணிகளாகக் குலுங்கிக் காற்றில் அசைகின்றன. உமது கரம்பட்டு உமது கழனியின் கரைகள் உயர்ந்தன. அயராத உழைப்பால் வளமான விளைவைக் காணுகிறீர். குறைவின்றி வாழ்கிறது உமது குடும்பம். இதோ; இந்த இளைஞன் இரும்பினையொத்த உடலமைப்பு கொண்டவன். இருப்பினும் சோம்பல் இவனை அடிமையாக்கிக் கொண்டது. அதனால்தான் இவன் எதிரே காய்ந்து கிடக்கும் கழனி! அருகே, பெருக்கெடுத் தோடும் வாய்க்கால்! வாய்க்கால்! நீரை



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

வகைப்படுத்திக் கழனிக்குப் பாய்ச்சவோ, செப்பனிட்டுக்கொள்ளவோ இவன் தயாராக இல்லை – புரிகிறதா முதியவரே! நிலமகளான நான் எல்லா வளமும் தரத் தயாராக இருக்கிறேன் இவன் அதனைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பாமல் சோம்பேறியாகத் திரிகிறான். கையில் பொருள் இல்லை; அதனால் கடிமணம் நிறைவேறவில்லை என்கிறான். இந்த விந்தையான இளைஞனை நினைத்துக் கொண்டுதான், நான் எனக்குள்ளாகவே சிரித்துக் கொள்கிறேன்"

இந்த விளக்கத்திற்குப் பிறகு நிலமகளின் குரல் கேட்கவில்லை. சிரிப்பு முழக்கமும் இல்லை. பெரியவர், கார்மேகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். கார்மேகம், தோளைக் குலுக்கிக்கொண்டு எழுந்தான். ஒரு மூலையில் கிடந்த மண்வெட்டியைக் கையில் எடுத்தான். "பெரியவரே! என்னைப் பார்த்து இந்தப் பூமியே கேலி பேசிவிட்ட பிறகு இனியும் நான் சோம்பல் புழுவாகச் சுருண்டு கிடக்கமாட்டேன் – இதோ! உழைக்கப் புறப்பட்டு விட்டேன்" எனக் கூறியவாறு, வாய்க்காலை வெட்டித் தன் வயலின் பக்கம் திருப்பினான். பெரியவர், புன்னகை புரிந்தவாறு அவனைத் தட்டிக்கொடுத்து "தம்பீ! என் பெண்ணையே உனக்குத் துணைவியாக்குகிறேன்" என்று கூறினார்.

இந்தக் கற்பனை ஓவியத்திற்கு அடிப்படையான குறளோவியம் இதோ:

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்."

அதிகாரம்: 104 **உழவு** **பாடல்: 1040**

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

இதழின் உள்ளே..

குறளோவியம் 2
பல்கிப் பெருகி பலன் தரும் பங்குனி உத்திரம்
புலவர் பூசை ச. ஆட்சிலிங்கம் 5
திருமயிலைப் பங்குனிப் பெருவிழாவில் அங்கம்பூம்பாவை விழா 6
அருளியல் – டாக்டர். திருமதி. ராதா தியாகராசன் எம்.ஏ.பி.எச்.டி., 7
சண்டேசுவரர் – திரு. க. சுகுமாரன் 11
தொண்டர் சேவடி ஏத்தி வாழ்த்தும் என்நெஞ்சமே! – முனைவர். பரந்தாமன் 13
பேரருள் நல்கும் பிரம்ம புரீசுரமான வழுவூர்
பனையபுரம் அதியமான் 17
திருமால் அவதார ஸ்தலம் திருப்புல்லாணி 22
கெடுவான் கேடு நினைப்பான்
திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் 26
உலகம் உய்ய உதித்த உடையவர் – பெ.ராமநாதப்பிள்ளை 29
தவத்திரு தண்டபாணி சுவாமிகள் – நா.ர. முருகவேள் 33
அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில் திருப்பாதிரிப் புலியூர் 37

வள்ளி தெய்வானை சமேத அருள்மிகு சிங்கார வேலர்

பல்கிப்பெருகி பலன் தரும் பங்குனி உத்திரம்

"மீன" மாதம் என்று கொண்டாடப்படும் பங்குனி மாதம் வேனிற்காலத்தின் தொடக்கமாக அமைகிறது. பங்குனி என்பதற்குப் பல்கிப்பெருகுதல் என்பது பொருள். இம்மாதத்தின் முழுநிலவு நாள் உத்திர நட்சத்திரத்தோடு சேர்ந்து வரும். உத்திரம் என்பதற்கு மேலானது தாங்குவது என்பது பொருள்.

வாழ்வில் மேன்மையும் உயர்வும் பெற பங்குனி மாதத்தில் சிறப்பு வழிபாடுகள் செய்கின்றனர்.

பெரும்பாலான சிவாலயங்களில் பங்குனி உத்திர நாளில் சிவ பார்வதியரின் திருமண விழா கொண்டாடப்படுகிறது. காளிதாசனின் குமார சம்பவத்தில் சிவபார்வதியர் திருமணம் பங்குனி உத்திரத்தில் நடைபெற்றதாகக் கூறப்பட்டுள்ளது சிந்திக்கத் தக்கதாகும்.

முருகன் ஆலயங்களில் பங்குனி உத்திரம் தனிச்சிறப்புப் பெற்றுள்ளது . முருகன் வடிவங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நட்சத்திரத்தில் சிறப்பு வழிபாடு செய்யப்படுகிறது.

ஆறுமுகப் பெருமானுக்கு விசாகமும், வள்ளிதெய்வானை உடனாய சுப்பிரமணியப் பெருமானுக்குக் கிருத்திகையும், வில்லேந்திய முருகனுக்குப் பூரமும் உரிய நாட்களாகக் கொள்ளப்பட்டு சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

இவ்வகையில் தண்டாயுதபாணியாக விளங்கும் முருகனுக்கு உரிய திருநட்சத்திரம் உத்திரமாகும். உத்திர நட்சத்திரம் தோறும் தண்டாயுதபாணிக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. பழனியில் பங்குனி உத்திரத்தைக் கடைநாளாகக் கொண்டு பெருந்திருவிழா தேரோட்டத்துடன் நிகழ்கிறது. கொங்கு மண்டலம் முழுவதும் முருகன் தண்டாயுதபாணியாக விளங்கு வதால் இம்மண்டலத்தில் பங்குனி உத்திர விழா தனிச் சிறப்புடன் கொண்டாடப் படுகிறது. இவ்விழா கொடியேற்றத்துடன் பத்துநாட்கள் நடைபெறும்.

திருமால் ஆலயங்களிலும் பங்குனி உத்திரநாள் சிறப்புடன் கொண்டாடப் படுகிறது. இந்நாளில் பெருமாள் தாயார் சந்நிதிக்கு எழுந்தருள்கிறார். உத்திரத்தில் தாயார். பெருமாள் திருக்கல்யாணம் சிறப்புடன் நிகழும். அந்நாளில் இருவரும் ஒருசேரக் காட்சியளிக்கின்றனர். இதற்கு சேர்த்தி உற்சவம் என்பது பெயர்.

மீன மாதம் மன்மதனுக்கு உரிய மாதமாகும். இம்மாதத்தில் மீன் கொடித் தேரில் பவனி வரும் மன்மதனுக்கும் ரதிக்கும் திருமண விழா கொண்டாடுகின்றனர். இவ்விழாவைக் கொண்டாடுவதால் பருவப் பெண்களுக்கு நல்ல கணவன் அமைந்து சுகமான வாழ்வு உண்டாகும் என நம்புகின்றனர்.

சிலப்பதிகாரம், கலித்தொகை முதலிய நூல்களில் காமவேளுக்கு விழாக்கள் நடைபெற்ற செய்தி. கூறப்பட்டுள்ளது. சங்க காலம் தொட்டு சிறப்பாக நடைபெற்று வரும் பழம்பெருமை வாய்ந்த இந்த பங்குனி உத்திர விழாவில் கலந்து கொண்டு வாழ்வில் வளமும் நலமும் பல்கிப் பெருகி மேன்மை பெற இறையருளைப் பிரார்த்திப்போம்.

புலவர் பூசை.ச. ஆட்சிலிங்கம்
அருள்மிகு கபாலீச்சரம்

திருமயிலைப் பங்குனிப் பெருவிழாவில் அங்கம்பூம்பாவை விழா

மேன்மை பெற்றதான பங்குனி உத்திரம் நாம் தெய்வீகத் திருமணங்களை நடத்தி வைத்து அருள் பெறுவதற்குரிய காலமாகும். இதையொட்டி அனேக ஆலயங்களில் பங்குனி உத்திர கல்யாணப் பெருவிழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. அவ்விழாவை கடைநாளாகக் கொண்டு பெருந்திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இவ்வகையில் மயிலாப்பூரில் கொண்டாடப்படும் பங்குனி உத்திரத் திருவிழா உலகப்புகழ் பெற்றதாக விளங்குகிறது. இத்தலத்தில் அடியவர்களைப் போற்றிக் கொண்டாடப்படும் அறுபத்துமூவர் விழாவும், இத்தலத்தில் சிறப்பை மேன்மைப்படுத்தும் வகையில் திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கி அற்புதம் நிகழ்வித்த ஐதீக விழாவும் எட்டாம் நாளில் கொண்டாடப்படுகின்றன.

இதில் அங்கம்பூம்பாவை விழா வரலாற்றுச் சிறப்புமிக்க ஐதீக விழாவாகும். இது முன்னாளில் இத்தலத்தில் நிகழ்ந்த அதிசயத்தை மக்களுக்கு மீண்டும் நடத்தி நினைவூட்டும் காட்சியாக அமைகிறது.

இன்றைக்கு 1600 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த அந்த வரலாறு சைவ சமயத்தின் பொன்னேடுகளில் பொறிக்கப்பட்டிருப்பதாகும்.

இத்தலத்தில் சிவநேசஞ் செட்டியார் என்பவர் வாழ்ந்துவந்தார். திரண்ட நிதிக்கு அவர் பதியாவார். அவருக்கு ஒரே மகள். அவள் பெயர் பூம்பாவை. செட்டியார் அந்நாளில் சிறப்புற்று விளங்கிய திருஞானசம்பந்தரின் புகழினைக் கேள்விப்பட்டு அவர்பால் அன்பு பூண்டு தன் மகளை அவருக்கு மணம் முடித்து வைக்க விரும்பினார்.

விதி வேறு விதமாக இருந்தது. பூஞ்சோலையில் பூப்பறிக்கும் வேளையில் பூம்பாவையைப் பாம்பு தீண்ட மாண்டு போனாள். செட்டியார் வருந்தினார். அவளை எரியூட்டி, சாம்பலையும் எலும்பையும் ஒரு குடத்திலிட்டு கன்னிமாடத்தில் வைத்திருந்தார். ஆண்டுகள் சில கழிந்தன.

அருள்வலம் வந்து பல தலங்களையும் வணங்கிப் போற்றி வரும் வேளையில் திருஞானசம்பந்தர் திருவொற்றியூர் வந்தார். அதைக் கேள்வியுற்று செட்டியார் அவரை மயிலைக்கு எதிர் கொண்டழைத்து வந்தார். அருகிலிருந்தவர்கள் பூம்பாவையைப் பற்றி அவரிடம் கூறினர். ஞான சம்பந்தர் செட்டியாரிடம் அந்த எலும்புகளும் சாம்பலும் அடங்கிய குடத்தைக் கொண்டு வந்து இறைவன் திருமுன்பு வைக்கும்படிக் கூறினார்.

பின்னர் அவளை நோக்கிப் பாடுவதாக, இறைவனிடம் விண்ணப்பித்தார். அப்பதிகத்தில் பாடல்தோரும் மயிலாப்பூரில் நடக்கும் திருவிழாக்களின் பெருமைகளையும் அதைப் பார்க்காமல் போனாயோ என்ற வினாவையும் வைத்து பாடினார்.

இறைவன் அருளால் எலும்பும் சாம்பலும் புதுமை பெற்று பெண்ணாயின. குடம் உடைபட பூம்பாவை வெளிப்பட்டாள். அங்கங்களில் (எலும்பும் சாம்பலும்) இருந்து உண்டானதால் அவள் அங்கம்பூம்பாவை எனப்பட்டாள்.

அப்பெண் பேரழகு படைத்து விளங்கினாள். தனது பாடலைக்கேட்டு அவளை இறைவன் உருவாக்கி அளித்ததன் மூலம் சிவபெருமானின் கருணை வெள்ளத்தைத்தன் ஆயிரம் முகத்தால் ஞான சம்பந்தர் கண்டார் என்கிறார் சேக்கிழார்.

செட்டியார் சம்பந்தரை வணங்கி இப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்றார். அவர் இவள் நமது திருமகள். பதிகத்தால் பிறந்த மகள் என்று கூறி மறுத்துவிட்டார். அவள் தனக்கென அமைந்த கன்னிமாடத்தில் வாழ்ந்து காலகதியில் வீடுபேறு பெற்றாள். இதனை நினைவூட்டுவதாகவே இவ்விழா கொண்டாடப்படுகிறது.

எட்டாம் நாள் காலையில் திருஞானசம்பந்தர், அங்கம்பூம்பாவை, சிவநேசஞ்செட்டியார் திருவுருவங்கள் பல்லக்குகளில் மடவளாகம் வழியாக திருக்குளத்தின் மேற்குப் பக்கம் அடைகின்றனர். சுவாமி வீதி வலமாக அம்மண்டபத்திற்கு எழுந்தருளுகின்றார். (அப்போது அங்கம்பூம்பாவையை திரையிட்டுவைப்பர்)

ஓதுவாருக்குப் பரிவட்டம் கட்டி தீபாராதனை செய்வர். அவர் பெரிய புராணத்திலுள்ள இந்த வரலாற்றுப் பகுதியை விளக்கமாகக் கூறுவார். பிறகு திரை விலக்கி அங்கம்பூம்பாவைக்கும் சுவாமிக்கும் தீபாராதனை செய்யப்படும். பிறகு சுவாமியுடன் சம்பந்தர், அங்கம்பூம்பாவை, செட்டியார் ஆகியோரும் பவனி வந்து திருக்கோயிலை அடைகின்றனர்.

கபாலீசுவரர் திருக்கோயிலில் குடத்தின் மீது நின்று கொண்டிருப்பவளாக அங்கம்பூம்பாவை எழுந்தருளியிருக்கும் சிற்றாலயம் உள்ளது. அதன் முன் மண்டபத்தில் திருஞானசம்பந்தர் பதிகம் அருளும் கோலத்தில் உள்ளார்.

பூம்பாவையை உயிர்பித்து அருள் புரிந்ததால் கபாலீசுவரப் பெருமானுக்குப் "பூம்பாவை ஈசன்" என்பதும் பெயராயிற்று.

அங்கம்பூம்பாவை விழாவில் புதிய மண்பாத்திரத்தில் நாட்டுச்சர்க்கரையை இட்டு அதன் வாயை மஞ்சள் துணியால் கட்டிக் கொண்டு வந்து படைக்கின்றனர். பிறகு துணியைக் கிழித்து அந்த சர்க்கரையை எல்லோருக்கும் அளிக்கின்றனர். இதனால் பூம்பாவை பெற்றது போல் புதிய வாழ்வையும் நோய் நொடியற்ற நல்வாழ்வையும் பெறலாம் என்று நம்புகின்றனர்.

'அருளியல்'

"இன்னா தம்ம இவ்வுலகம்
இனிது காண்கிதன் இயல்புணர்ந்
தோரே"
(புறம் 194)

என்று புறநானூற்றுப் புலவரும்,

"காக்கைச் சிறகினிலே நந்த லாலா –
நின்றன்
கரிய நிறந் தோன்றுதையே நந்த
லாலா
பார்க்கு மரங்கள் எல்லாம் நந்த லாலா
– நின்றன்
பச்சை நிறந்தோன்று தையே நந்த
லாலா"
(பாரதி வேதாந்தப் பாடல்கள் 11)

என்று, பாரதியாரும் பாடியுள்ளார்கள்.

இந்த பாடல் வரிகளைக் காணும் பொழுது, இவர்களுடைய நோக்கும், சிந்தனையும் ஏனையோரினும் தனித் தன்மை கொண்டவைகளாகத் தோன்றுகின்றன.

மற்றவர்கள் அதாவது சாதாரணப் பட்டவர்கள், தங்கள் உள்ளத்தைக் கருவியாகக் கொண்டு, ஐம்பொறிகள் வாயிலாக உலகக் காட்சிகளை அறிகின்றனர். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று உலகைத் துய்த்து இன்ப துன்பங்களுக்கு ஆளாகின்றனர். தம்மையொத்த உலகியல் அறிவுடையோருடன் பழகி, ஒரு எல்லைக்குட்பட்டு வாழ்ந்து மறைகின்றனர்.

ஆனால், இவர்களினின்று வேறுபட்டு, ஐம்பொறி அறிவுக்கு அப்பால் உள்ள இறையாற்றலை, இயற்கைக் காட்சியை ஞானிகள் தம் ஆழ்மனத்தால் சிந்தித்து, இறையாற்றலாகிய பேரொளிப் பிழம்பைப், பேரழகை ஐம்பொறிகளின் துணையின்றி, தம் மனக்கண்ணால் கண்டு, கலந்து, அந்தப் பேரானந்த அனுபவத்தைத் தம் சொற்களால் முடிந்த அளவில் வெளிப்படுத்திப் போந்தனர். அத்தகைய உயர் அனுபவக் காட்சியைச் சுவைத்த பெரியோர்கள்,

"கண்டு கொண்டேன், கலந்து
கொண்டேன்
கனிந்து கொண்டேன், களித்தேன்"

என்று தன்னை மறந்து வெளிப்படுத்தினார்கள். இந்த அற்புத அனுபவத்தை "அருளியல்" (Mysticism) என்றும், அதை அனுபவித்த

ஸ்ரீ மாணிக்கவாசகர்

நுண்ணறிவாளரை 'அருளியலார்' என்றும் அறிஞர்கள் அடையாளம் காட்டினர்.

'அருளியல்' (Mysticism) என்ற சொல்லின் பொருளை ஓரளவு உள்ளத்தால் உணரலாமே தவிர, அதை முழுவதும் சொல்லால் விளக்கிட இயலாது என்றே கூறலாம். வில்லியம் ஜேம்ஸ் என்ற அறிஞர் 'அருளியல்' பற்றிக் கூறும்பொழுது, மனதின் எங்கோ ஒரு மூலையில் நினைவுக்கு வரும் ஒரு பண்; அதை இசைக்கவும் இயலவில்லை; அந்நினைவை விடவும் இயலவில்லை; அது இன்ன பண் என்று கூறவும் இயலவில்லை, என்று சொல்லத் தோன்றும் என்றுரைக்கின்றார்.

என்.சிப்.((N.Ship) என்ற பேரறிஞர் ஓர் எடுத்துக் காட்டால் விளக்குகின்றார். ரொட்டி வயிற்றினுள் சென்று கரையும் போதுதான் உணவாகின்றது; கரைந்து கரைந்து உடலோடு சேரும் போதுதான் அதன் உண்மைப் பயன் நிறைவேறுகிறது.

இது போல நாம் இறையுணர்வோடு, இயற்கைக் காட்சியோடு இணைந்து கரைந்து கரைந்து அந்நிலையோடு கலந்து, அவற்றின் மயமாகும் போதுதான் 'அருளியல்' நிலையை அடைய முடியும்.

ஓர் ஆழ்ந்த அருள்ஞான இன்ப உணர்வு, 'அருளியல்' என்று ஒருவாறு பொருள் கூறலாம். மனித வாழ்வின் மணி முடி என்று கூறத்தக்க பேரின்பப் பெருவாழ்வு அது., அந்நிலையை, இவ்வியல்பிற்று, இவ்வண்ணத்தது என்றோ காரண காரிய முறையிலோ எடுத்துக் கூற இயலாது.

Plotinaus என்ற அறிஞர் இதுபற்றிக் கூறும் பொழுது 'இறையை நோக்கித் தனித்த ஆன்மிகப் பயணம்' என்ற பொருளில் "the flight and the alone to the alone' என்றுரைக்கின்றார்.

அருளியலின் (Mysticism) நிலையையடைந்த ஆன்மா தன்னை இழந்த நிலையில் இறைச்சக்தியோடு கலந்து நிற்பதை மணிவாசகரின்

'கயல்மாண்ட கண்ணிதன் பங்கன்
எனைக்கலந் தாண்டலுமே
அயல் மாண்டு அருவினைச் சுற்றமும்
மாண்டு அவனியின்மேல்
மயல் மாண்டு மற்றுள்ள வாசகம்
மாண்டு என்னுடைய
செயல் மாண்ட வாபாடி தெள்ளேணம்
கொட்டாமோ'

என்ற பாடலின் மூலம் நாம் அறியலாம். இப்பாடல் மூலம் மணிவாசகப் பெருந்தகையின் அருளியல் நிலையை நாம் உணரமுடிகிறது.

அருளியலின் பல்வேறு அனுபவங்களை எடுத்துக் கூறுவதற்கு, அருளியலார் நமக்குப் பழக்கமுள்ள அடையாளங்களைப் (Symbols) பயன்படுத்திச் சொல்லுருவில் காட்டுவார்கள். அவர்கள் அனுபவித்த பேரின்பத்தை – அதன் நிலைகளை ஓரளவு நெறிப்படுத்தி, சமயம், தத்துவம், இயற்கை, அன்பு, காதல் முதலிய துறைகளில் உள்ள சொற்களால் அடையாளமிட்டுக் காட்டுவார்கள். அருளியலில் இறைமை உணர்வு தலையாயதாக இருப்பினும் அதோடு இணையாக ஈடுபாடு கொண்டு அவற்றில் மூழ்கித் தன்வயமிழந்து நிற்பவர்களும் அருளியல் நிலையினரே,

அருளியல் அனுபவத்தை (Mystic experience) அருளியலாளர்கள் பல நெறிகளில் நின்று பெற்றுள்ளார்கள்.

இயற்கையழகில் ஈடுபட்டுக் கற்பனையில் மூழ்கி, அருள் இன்ப அனுபவத்தைப் பெற்றவர்கள். **வோர்ட்ஸ் வொர்த்** (Wordsworth) **பிளாக்** Blak போன்றவர்கள். இவர்களை nature mystics (இயற்கைக் காட்சி அருளியலார்) என்று கூறுகின்றோம்.

அன்பையும் அழகையும் அனுபவித்து, உருகி, அங்கு உட்பொருளாக ஒளிரும் இறைமையைக் கண்டு, இவ் அருள் அனுபவத்தைப் பெற்றார்கள் Shelly (ஷெல்லி), Rosetti (ரோசட்), Keats போன்ற மேனாட்டுக் கவிஞர்கள். இவர்களை Love & beauty mystic (அன்பு மற்றும் அழகுணர் அருளியலார்) என்று உரைக்கின்றோம்.

Plato (பிளேட்டோ), Plotinus (புளோட்டினஸ்), Eckhart (எக்காட்), Spinoza (பினோசா), Nesel (நெசல்) போன்ற அறிஞர்கள் தத்துவ சிந்தனையில் மூழ்கி, மூலப் பரம்பொருளுடன் ஒன்றி நின்று முன்பின் காண முடியாத ஆழ்ந்த உணர்வில்

ஈடுபடுகின்றனர். இவ்வனுபவம் பெற்றோரை Philosophic mystics (தத்துவ அருளியலார்) என்று வகைப் படுத்துகின்றோம்.

சமய நெறியில் வாழ்ந்து, முதிர்ந்து, கனிந்த இறையன்பால் உயிர்க்கு உயிராக அமைந்த அனுபவம் பெற்றவர்கள் நம்நாட்டுப் பெரியோர்கள் பலர். அவர்களை Devotional & Religious mystics (பக்தி சமய அருளியலார்) என்று கூறுவர். இவர்களுள் சிலர் இறைவனையே காதலனாகக் கொண்டு அருட் காதலனுபவத்தில் திளைத்துள்ளனர்.

திருவரங்கத்து அமுதனைக் காதலித்துக் கலந்தாள் சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாம் ஆண்டாள்,

திருவாலி யமுதனைக் காதலித்துக் கலந்தார் திருமங்கை யாழ்வாராகிய பரகால நாயகி,

சங்கும் சக்கரமும் ஏந்திய ஆரா அமுதனைக் காதலித்துக் கலந்தாள் நம்மாழ்வாராகிய சடகோப நாயகி. என்னும் பராங்குச நாயகி

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனைக் காதலித்துக் கலந்தார் இராமலிங்கராகிய வள்ளல் நாயகி.

பரிமேல் வந்த பிரானை, பெருந்துறை மேவிய பெம்மானைக் காதலித்துக் கலந்தார் மாணிக்கவாசக நாயகி. இந்த அருட்காதல் இன்பக் கலப்பினை Bridal mysticism (நாயகி பாவ அருளியல்) என்று கூறுகிறோம்.

இவ்வாறு அருளியலார் பற்றியும், அருளியல் படிநிலைகள் பற்றியும் மேனாட்டு அறிஞர்கள் ஓரளவு நெறிப்படுத்திப் பல நூல்களை யாத்துள்ளனர். அந்த அருளியல் நூல்களைத் துணை கொண்டு, அவற்றை வகைப் படுத்திக் காணமுயன்ற என் எளிய முயற்சி தான் அருளியல் (Mysticism) பற்றிய இந்தஆய்வுக் கட்டுரை.

மணிவாசகப்பெருந்தகை திருப்பெருந்துறையில் குருவாக வந்த இறைவனைக் கண்டு, அருளுபதேசம் பெற்றபின், பிரிந்த நிலையில் ஏங்கித் தவித்து அருளிய அனுபவப் பாடல்கள் என் காதில் எதிரொலித்தன. மணிவாசகர் பெற்ற பெருநிலையும், மேனாட்டார் ஆய்வு செய்த அருளியல் நிலையும் (Mysticism) என்னை ஆய்வு செய்யத் தூண்டின.

மணிவாசகப் பெருமான், குருந்த மர நிழலில் இருந்து பெற்ற அருளாரமுதத்தை இருள் தீர உண்டு, உள்ளம் குளிர்ந்த போதெல்லாம் உவந்து உவந்து பாடினார். தாம் பெற்ற ஞானப்பேரமுதைத் தரணிக்கெல்லாம் தமிழ் மழையாகத் தந்தார். அது இன்னமுத வெள்ளமாகப் பெருகித் தித்திக்கும் திருவாசகமாய், கற்பார் நெஞ்சத்தை அருளியல் உலகிற்கு அழைத்துக் செல்கிறது.

திருப்பெருந்துறையில் திருவாளன் அளித்த தீருநீற்றையும் செவ்வியதோர் உபதேசத்தையும் பெற்ற திருவாதவூரர், குருநாதனைத் தம் உள்ளக் கோயிலின் தனிப் பெருந்தலைவனாகக் கொண்டார். 'இமைபொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் என்று அருமைத் தலைவனிடம் அளப்பரிய அன்பு கொண்டு அப்பெருமானைக் கண்ணாரக் கண்ட காட்சியை நெஞ்சார நினைந்து மகிழ்ந்தார்.

"கண்ணால் யானும் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே, காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க"

என்றும்

பரமானந்தப் பழங்கடல் அதுவே அவன் என்னை ஆட்கொண்டருளினான் என்றும் கூறி இறுமாந்திருந்தார்.

அப்பெருமானைத் தொழுது, அவன் சேவடிகளை இறுகத் தழுவிக் கொண்டு, தன் தலைமேல் வைத்துக் கொண்டு, பெருமானே! பெருமானே! என்று அரற்றி, தழலதுபட்ட மெழுகென உருக வேண்டுமென ஆசைப்பட்ட நிலையை உரைக்கின்றார்.

"கையால் தொழுது உன்கழல்
சேவடிகள்
கழுமத் தழுவிக்கொண்டு
எய்யா தென்றன் தலைமேல் வைத்து
எம்பெருமான்
எம்பெருமான் என்று
ஐயா என்றன் வாயால் அரற்றி அழல்
சேர்மெழுகு ஒப்ப
ஐயாற்றரசே! ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே!"
(ஆசைப்பத்து)

அப்பெருமானைத் தலைவனாக ஏற்று,

அவனோடு கலந்து, தத்தளித்த அனுபவத்தையும், மேலும் அவன் அருளாரமுதத்தை வேண்டியும் பெற வேண்டிய தாகத்தையும் உரைக்கின்றார்.

"வழங்குகின்றாய்க்குன் அருளார்
அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்கு கின்றேன் விக்கினேன்
வினையேன் என் விதி இன்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்
தந்து உய்யக் கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய்
அடியேன் உன்றன்
அடைக்கலமே"
(அடைக்கலப் பத்து)

மேலும் தன் உணர்வுகளைச் சொல்லிச் சொல்லி உருகுகின்றார்.

'அற்புதமான அமுதத் தாரைகள் ஏற்புத் துளைதொறும் ஊற்றெடுக்கத்' தன்னை மறந்தார். தம்மை யாளும் தமிழ் வேந்தனையும் மறந்தார்; அவன் அளித்த கடமையையும் மறந்தார்.

"என்னை யான் என்பது மறியேன்,
பகல் இரவாவது மறியேன்,

என்றும் மன வாசகம் கடந்தோன் என்னை மத்தோன் மத்தனாக்கிவிட்டான் என்று பவளவாய் திறந்து விம்மிதமுற்று வாழ்த்தினார்.

இவ்வாறு தம் உயிரைத் தொட்டு ஈர்த்த அவ்வுணர்வைத்தான் மணிவாசகரின் அருளியல் அனுபவம் (Mystic Experience) என்று நாம் சொல்கின்றோம்.

அருளியல் பற்றி எடுத்துக்காட்டால் ஓரளவுதான் உரைக்கலாம். அழகிய பூம்பொய்கைகள் நிறைந்த சோலையின் நடுவில் அமைக்கப்பட்ட மேடையில், இளம் காற்று வீசும் பொழுது அது நம் மேனியில் பட்டவுடன் ஓர் இன்ப அனுபவம் உண்டாகிறது.

அதுபோல் கடவுள் ஒளிமயமாக விளங்குவதை நம் உயிரானது கண்டு இன்பம் அடைவதும், கடவுளோடு ஒன்றி நின்று அப்பேரின்பம் அனுபவிப்பதும் அருளியல் அனுபவம் எனப்படும். அது இன்ன தன்மையது என்று கூறமுடியாதது. அதன் தன்மையாவது, மக்கட்குக் கூற அரிதானது; கற்று எட்ட முடியாதது; மற்ற ஒப்புக்கு யாதும் இல்லாதது. அதை பக்குவம் எய்திய உயிரால்தான் உணரமுடிகிறது. இன்னும் சுருங்கச் சொல்வோமேயானால், அது ஒரு 'உணர்வு வயப்பட்ட உலகம்' (Spiritual World) என்று கூறலாம்.

டாக்டர். திருமதி. ராதா தியாகராசன்
எம்.ஏ பிஎச்.டி.,

இறைவன் அழைத்த கடல்

இறைவன் விரும்பிய இடத்தில் ஏழு கடல்களின் அம்சத்துடன் கூடிய தீர்த்தங்கள் தோன்றியுள்ளன. இவற்றை, சப்த சாகர தீர்த்தங்கள் என்பர். இறைவன் பலமுறை இத்தகைய கடல் தீர்த்தங்களைப் படைத்திருக்கின்றான் என்பதைப் புராண வரலாறுகள் கூறுகின்றன.

இறைவன் மண்மீது மாமன்னனாக வந்து மதுரையில் மீனாட்சி அம்பிகையை மணந்து முடிபுனைந்து அரசாட்சி செய்தார். அப்போது மீனாட்சியின் தாயான காஞ்சன மாலையார் மருமகனான சிவபெருமானிடம் கடல் நீராடவிரும்புவதாகக் கூறினார். நீங்கள் கடலைத் தேடிச் செல்ல வேண்டாம், கடலையே இங்கு வரவழைக்கிறேன் என்று கூறினார் சிவபெருமான். அவரது விருப்பத்தை உணர்ந்த ஏழுகடல்களும் மதுரையில் ஒரு தீர்த்தமாகத் தோன்றின. அதற்கு எழுகடல் தீர்த்தம் என்பது பெயர். அந்தத் தீர்த்தத்தின் கரையில் காஞ்சன மாலையார் ஆலயம் உள்ளது. குந்தி தேவிக்காக எழு கடல்களும் திரண்டு வந்து தீர்த்தம் ஆன தலம் நல்லூர் ஆகும். உபமன்யு முனிவர் பால் வேண்டி அழுதார். பெருமான் அவருக்காகப் பாற்கடலையே அங்கு அழைத்துப் பாலூட்டும்படி செய்தார். மணிவாசப் பெருமானுக்காகவும் ஒருமுறை பாற்கடலை அழைத்ததாகக் கூறுகின்றனர். அது திருப்பாற்கடல் தீர்த்தம் எனும் பெயரில் சிதம்பரத்தில் உள்ளது.

'சண்டேசுவரர்'

(க.சுகுமாரன். மன்னார்குடி)

சிவாலயம்தோரும் சண்டேசுவரர் சந்நிதி விளங்குகிறது. அதில் யோகநிலையில் சண்டேசுவரரைத் தரிசிக்கிறோம்.

சேய்ஞலூர் தஞ்சை மாவட்டத்தில் ஒரு சிறு கிராமம். அவ்வூர் அக்கிரகாரத்து மாடுகளைக் கூலிக்கு மேய்த்து வந்தான் ஒரு இடையன். அவன் பசுக்களை அடித்ததைப் பார்த்து மனம் பொறுக்காமல் தானே மேய்ப்பதற்கு முன் வந்தான் ஒரு அந்தணச் சிறுவன். இடையனுக்கு என்ன வந்தது? விட்டு விட்டுப் போய் விட்டான்.

சிறுவன் பெயர் விசாரசர்மா. அவன். மாடுகளை ஓட்டிக் கொண்டு போய் ஓர் இடத்தில் விட்டான் மண்ணியாற்றங் கரையில் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. சிறுவன் மணலைச் சிவலிங்க வடிவில் குவித்தான். அதைச் சிவனாகவே நினைத்தான். மலர்களைப் பறித்து வந்து அருச்சனை செய்தான்.

தண்ணீருக்காகக் கொண்டு போன குடத்தில் பசும்பாலைக் கறந்து மணல் லிங்கத்திற்கு அபிஷேகம் செய்தான். அதைப் பையனின் தந்தை பார்த்து விட்டார். கோபம் வராதா என்ன! காலால் பால்குடத்தை இடறினார். அதுவரை தன் வழிபாட்டிலேயே லயித்துப் போயிருந்த சிறுவன் பக்கத்தில் கிடந்த ஒரு கோலை எடுத்துத் தந்தையின் காலைப் பார்த்து ஓங்கி வீசினான். அது மழு (கோடலி) வாக மாறித் தந்தையின் காலைத் துண்டித்தது. தந்தை துடித்துப்போய் விழுந்து மாண்டான்.

சிறுவன் தொடர்ந்து வழிபாட்டைச் செய்து முடித்தான். சிவபெருமான் சிறுவன் முன் தோன்றினார். மலர்க்கையால் அவனைத் தீண்டினார். தம் முடியில் அணிந்திருந்த கொன்றை மாலையை எடுத்து அவனுக்குச் சூட்டினார். சிவ கணங்களுக்கு தலைவனாகும் பதவியைத் தந்தார். இனி தாம் உண்டதும் உடுத்ததும் ஆகிய பிரசாதத்துக்கு உரிமையானவன் நீயே என்று வரம் கொடுத்தார். சண்டீசன் என்ற பெயரையும் தந்தார்.

பெரிய புராணத்தில் கூறப்படும் சண்டேசுவரருடைய கதையின் சுருக்கம் இது.

இக்காட்சி புராணங்களிலும், சிற்பங்களிலும் ஓவியங்களிலும் அதிக அளவில் காணப்படுகின்றன.

சண்டேசப்பதம் பெற்ற விசார தருமர் சிவகணங்களுக்குத் தலைவராயும், திருக்கோயில்களின் நிருவாக உயர் அதிகாரியாகவும், சிவ தரிசனப் பலனை



அன்பர்களுக்கு தருபவராகவும் விளங்குகிறார். ஆகவே இப்பெருமானாரைச் சிவாலயங்களில் வடக்கு ஆவரணத்தில் தென்திசை நோக்கியவாறு அமைத்து வழிபடுதல் மரபாக உள்ளது. இவரை 'சண்டேசுவரர்' என்று போற்றுவர்.

எல்லா சிவாலயங்களிலும் சண்டேசுவரப் பெருமானுக்கு ஒரு சிறு தனிச்சந்நிதி உண்டு. அது கருவறைக்கு வெளியே அபிஷேக தீர்த்தம் விழும் கோமுகத்தை அடுத்து அதன் அருகில் அமைக்கப்பட்டிருக்கும். திருக்கோயிலில் சிவதரிசனமும் வழிபாடும் செய்த பிறகு இறுதியாகச் சண்டேசுவர தரிசனத்துடன் நமது பிரார்த்தனை நிறைவு பெறுகின்றது. சண்டேசுவரரைத் தரிசனம் செய்து முடிக்காத போது, சிவதரிசனம் நிறைவு பெறாததோடு அதன் பயனும் நமக்குச் சித்திப்பதில்லை, எனப் பெரியோர்கள் கூறுவர்.

சிவத்தியானத்திலேயே ஆழ்ந்து சிவ, சிந்தனையுடன் திகழும் சண்டேசுவரர் முன் நம் வருகையைத் தெரிவிப்பதற்காக மூன்று முறை மெல்லெனக் கையைத்தட்ட வேண்டும் என்று சிலரும், ஆலயத்திலிருந்து எந்தப்பொருளையும் எடுத்துச் செல்லவில்லை என்பதை இரு கைகளையும் சேர்த்துப் பிரித்துக்காட்டிக் கையில் எதுவுமில்லை என்ற கருத்தை வலியுறுத்துவதாக அமைந்தது என்றும் கூறுவர். இவரை வலம் வருதல் கூடாது. இவர்முன் கையைச் சொடுக்குவதும் கூடாது.

முற்காலத்தில் சிவன் கோயில்களுக்கு நன்கொடை கொடுத்தால் அதைச் சண்டேசுவரர் பெயரால் உரிமை செய்வார்கள். உதாரணமாக விக்கிரம சோழன் செப்பேடு *698 (டி 36589)* கூறுவது காண்போம்.

... இப்படிக்கு விக்ரம சோழீச்சரமுடைய சுவாமி, பிறை மணியம்மை மகமைக் கட்டளையிட்டுச் சண்டேசுரப் பட்டயம் எழுதிக் கொடுத்தோம். ஐம்பத்தாறு தேசத்தில் பலர் கூடி, தாரசுரப்பேட்டையில் கொண்டு விற்கின்ற நூல்காரப் பலரோம்...

மேற்கண்டவாறு கோயிலுக்கு நிலம், கட்டடம், நகைகள் முதலிய தானங்கள் சண்டேசுவரர் பெயரால் செய்வது மட்டுமல்லாது.

வழிபாடு செய்ய வருகின்றவர்கள் பால், பழம், எண்ணெய் திரிநூல் முதலியவற்றைச் சண்டேசுவரர் முன்பு வைப்பதும் வழக்கமாயிற்று.

ஒரு திரிநூலாவாது சிவன் கோயிலுக்குக் காணிக்கை செலுத்த வேண்டும் என்ற நினைப்பு நம் முன்னோர்களுக்கு இருந்தது. அந்த எண்ணம் தான் இப்போது திரிந்து போய்த் தான் உடுத்திருக்கும் ஆடையின் நூலைப் பிய்த்துச் சண்டேசுவரர் முன் போடும் பொருளற்ற வழக்கமாக மாறியிருக்கிறது.

சண்டேசுவரர் சிவபெருமானுக்கு உறவு முறையில் மகன் ஆவார். அவ்வாறு மகனாக ஆட்கொள்ளப்பெற்றவர் என்பதனை,

"வந்து மிகைசெய் தாதை தாள்
மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே
அரனார் மகனார் ஆயினார்."

என வரும் பெரிய புராணச் செய்யுள் விளக்கும்.

சண்டேசுவரரே தொண்டர்களுக்கு எல்லாம் தலைவராக விளங்கும் சிறப்புடையவர். அதனால் சண்டேசுவரர்க்குத் "தொண்டர் நாயகம்" என்னும் ஒரு பெயரும் உண்டு. இதனை

"சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே"

என்று திருப்பல்லாண்டு போற்றுகின்றது.

சிவலாயங்களில் திருவிழா நடக்கும் போது ஐந்து மூர்த்திகள் வீதிஉலா வருகின்றனர். இவர்களைப் பஞ்சமூர்த்திகள் என்பார்கள். முதலில் விநாயகரும், அடுத்து முருகனும், அடுத்து சோமாஸ்கந்தரும் (சிவன், முருகன், உமை சேர்ந்த தொகுப்பு உருவம்) அடுத்து ஒரு தனி அம்பாளும் கடைசியில் சண்டேசுவரரும் வருவர்.

விநாயகர், முருகன், ஞானசம்பந்தர் சண்டேசுவரர் ஆகிய நால்வரும் சிவபெருமானுக்குப்பிள்ளைமுறை உடையவரும் ஆவர்.

இவ்வாறு இலக்கியங்கள் போற்றும் சண்டேசுவரரை வணங்கிச் சங்கடங்கள் தவிர்ப்போம்.

*

தொண்டர் சேவடி ஏத்தி வாழ்த்தும் என் நெஞ்சமே!

ஸ்ரீமந் நாராயணன் ஆதியஞ்சோதியை பரமபதத்திலே வைத்து, இம்மண்ணுலகில் துவாபர யுகத்தில் கோகுலத்தில் யாதவகுலத்தில் கண்ணனாக அவதாரம் செய்தான். திருமால் பத்துடை (பக்தியுடைய) அடியவர்க்கு எளியவன் என்பதை இந்த அவதாரத்தில் மெய்ப்பித்துக் காட்டினான். கோகுல மக்கள் அனைவரும் அவருடைய அடியவர்க்கெளியவன் என்பதை இந்த அவதாரத்தில் மெய்ப்பித்துக் காட்டினான். கோகுல மக்கள் அனைவரும் அவனுடைய அடியவர்கள்தாம். எனவே தனது அடியவர்கள் ஆகிய கோபியர்கள். வீடுதோறும்புகுந்து, அவர்கள் சேகரித்துவைத்திருந்த பாலையும், தோய வைத்த குளிர்ந்த கட்டித் தயிரையும், வெண்ணெயையும், களவாடித் தன் நண்பர்களுடன் உண்டு மகிழ்ந்து வந்தான்.

இதைக் கண்ட கோபியர்கள், கண்ணனின் திருட்டுத்தனத்தை அவனது தாய் யசோதையிடம் புகார் செய்தனர். கண்ணன் மீது சுமத்தப்பட்ட பழிகளைக்கேட்டுப் பொறுக்க முடியாத யசோதை, கண்ணனைக் கல்உரலில் கட்டிப்போட நினைத்தாள். கண்ணனை உரலிடை நிற்கவைத்துவிட்டு கட்டுவதற்காகக் கயிற்றைத் தேடினாள்.

தாய் தன்னைக் கட்டப்போவதை முன்பே உணர்ந்த கண்ணன் தன் வீட்டிலுள்ள நீண்ட கயிற்றையெல்லாம் ஒருமுழம் துண்டுகளாக வெட்டிவைத்துவிட்டான். அந்தச் சிறுசிறு கயிறுகளை ஒரே கயிராக முடிந்து கண்ணனை உரலில் கட்டினாள் யசோதை. முடிகள் மிகுந்த கயிறு கண்ணனின் இடையில் தழும்புகளை ஏற்படுத்தியது. இப்படித் தாம்பாகிய கயிறினால் கட்டப்பட்டதால். கண்ணனுக்குத் "தாமோதரன்" என்ற பெயர் சூட்டப்பட்டது.

இதனை, மதுரகவியாழ்வார் அனுபவித்து, வருந்திப் பாடுகின்றார்.

"கண்ணி நுண் சிறு தாம்பினால்
கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன்"
(க.நு.சிறுதாம்பு – 1)

இக்கண்ணபிரானே! திருவரங்கத்தில் திருவரங்கநாதனாக எழுந்தருளி, காட்சிதந்து, கருணை பொழிந்து வருகின்றான். இவ்வுலகிற்கெல்லாம் தலைவனாக விளங்கும்

அரங்கநாதனிடம் பெரும்பக்திகொண்ட திருமால் அடியார்கள், திருமாலின் பன்னிரு திருநாமங்களில் ஒன்றான நாராயண நாமத்தை, நள்ளிருள் அளவும், பகலும் ஓயாது ஓதிவந்ததால் அவ்வடியவர் நாக்குகள் தழும்பு ஏறியிருந்தது. ஆடிப்பாடிய அடியவர்கள் திருவரங்கன் திருக்கோயில் முற்றத்தில் உடலில் தழும்பு எழும்படித் தரையில் விழுந்து வணங்கி, போற்றிப் பேரானந்தம் அடைந்தனர். அத்தகைய சிறப்பு வாய்ந்த திருமாலடியார்களின் திருவடிகளை தனது மனமானது மகிழ்ந்து வாழ்த்தி, வணங்கி பல்லாண்டு பாடுவேன் என்கின்றார் குலசேகரப்பெருமான்.

"தோய்ந்த தண்தயிர் வெண்ணைப் பாலுடன் உண்டலும் உடன் ஆய்ச்சி கண்டு ஆர்த்த தோளுடை எம்பிரான் என்ன அரங்கனுக்கு அடியார்களாய்"

நாத்தழும்பு எழ நாரணா என்று
அழைத்து மெய் தழும்பத் தொழுது
ஏத்தி இன்புறும் தொண்டர் சேவடி
ஏத்தி வாழ்த்தும் என் நெஞ்சமே.
(பெருமாள் திருமொழி 2-5)

பாசுரம் – 5

"அடியவரையே நினைத்து என்மனம் மெய் சிலிர்க்கும்" நப்பின்னையை மணக்க கோபத்துடன் எக்காள மிட்டு எதிர்த்த

ஏழு எருதுகளை ஒரே நேரத்தில் அடக்கி, அவைகளின் கொம்புகளை முறித்து, வெற்றி பெற்று, நப்பின்னையை மணந்தான் கண்ணபிரான். யமுனையின் கிளை நதியின் பக்கம் முனிவரின் சாபத்தால் கருடன் செல்லாதிருந்தான். கருடனின் பகைவனான காளிங்கன் என்னும் பாம்பு அங்குசென்று பயமின்றி வாழ்ந்து வந்தான். அவன் தன் கொடிய விஷத்தால் அந்நதி நீரையே விஷமாக்கிப் பல உயிர்கள் மாளும்படிச் செய்து வந்தான். இதை உணர்ந்த கண்ணன். தன்தோழர்கள் தடுத்தும்கேளாது, நதியில் குதித்து, காளிங்கன் படத்தின்மீது ஏறி நடனமாடி, அதன் கர்வத்தை அடக்கினான். அக்கண்ணபிரானே ஒளிவீசக்கூடிய கற்களால் கட்டப்பட்ட உறுதிவாய்ந்த மதில்களால் சூழப்பெற்ற திருவரங்கத்திலே, திருவரங்கராகக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான். காளமேகம் போன்ற அழகிய திருமேனியையுடைத் திருமாலை, திருவரங்கனாகத் திருவரங்கத்தில் கண்டு வணங்கிய திருமாலடியவர்கள் அவனைத் தங்கள் நெஞ்சினில் நிறையப் பெற்று மெய் சிலிர்த்தனர். அத்திருமால் அடியவர்களையே எண்ணி எண்ணிப் பார்த்து என் மனமும் உடலும் சிலிர்க்கின்றன என்கின்றார் குலசேகரப் பெருமான்.

"பொய் சிலைக்குரல் ஏழு எருத்தமிர்
அறுத்துப் போர் அர வீர்த்த கோன்
செய் சிலைச்சுடர் சூழ்ஒளித் திண்ணம்
மாமதிள் தென்ன ரங்கனாம்
மெய் சிலைக் கருமேகம் ஒன்றும் தம்
நெஞ்சுள் நின்று திகழப் போய்
மெய்சிலிர்ப்பவர் தம்மையே
நினைந்து
என்மனம் மெய் சிலிர்க்குமே"
(பெருமாள் திருமொழி 2-5)

பாசுரம் – 6

"தொண்டர்க்கு எப்பிறப்பிலும்
காதல் செய்யும் என் நெஞ்சமே"

இவ்வுலகிற்குத் தொடக்கமானவனும், இவ்வுலகைத் தோற்றுவிப்பவனும், என்றும் அழியாத தன்மையை உடையவனும் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பவனும்

ஆவான் திருமால் "ஆதிமூலமே" என்ற கஜேந்திரன்வாக்கும்"

"உலகம் யாவையும் தாமுள ஆக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டு உடையார் அவர் தலைவர்.

எனும் கம்பர் வாக்கும்.

"உடல் மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்"

எனும் நம்மாழ்வார் அருளிச் செயலும் இங்குத் தலைவனாக, தேவாதி தேவனாக விளங்குபவர் திருமால். "அயர்வறும்" அமரர்க்கும் அதிபதியவன் அவன்" எனும் நம்மாழ்வார் திருவாய் மொழி இங்கு நோக்கத்தக்கதாகும். அத்தகைய சீர்மைக் குணமுடைய திருமாலின் மலர் போன்றதும் துயரங்களைப் போக்கக் கூடியதுமான திருவடிகளைத் தன் தலையில் அணியும் விருப்பம் உடையவர்கள் திருமாலடியார்கள். பரதன், இராமபிரானின் திருவடிகளைச் சுமந்து வந்ததைப்போல் அவன் அடி சூடும் அடியவர்கள், அவர்களுடைய துயரங்களைப் போக்குபவன் திருமால் "துயரறு சுடரடி

தொழுது எழு என்மனனே" எனும் மாறன்வாக்கு ஈண்டு பொருந்துவதாகும் திருமாலின் திருவடிகளை வணங்கி, வழிபடாதவர்க்கும் அருள் புரிபவன் ஆபத்பாந்தவனான திருமால் இப்படி "எள்ளுக்குள் எண்ணெய் போலும்"

"கறந்தபாலின் நெய்யேபோலும்" எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை குற்றமற்ற நல்ல வழிகளையே எப்பொழுதும் வெளிப்படுத்துவான். அவனே நமக்கெல்லாம். தலைவன் ஆவான்; அவனே திருவரங்கனாகத் திருவரங்கத்தில் பள்ளி கொண்டுள்ளான்.

அத்திருவரங்கன் மீது ஆராத அன்பு பூண்ட அடியவர்களிடத்தே எப்பிறப்பாலும் என் மனம் அன்பு செலுத்தும் என்கின்றார் குலசேகராழ்வார்.. ஆழ்வார்,

"பகவத்தொண்டிற்கு பாகவதத்தொண்டே எல்லை நிலம்" என்பதையும்" பாகவதர்களை அண்டி, அவர்கள் மூலமே, பகவானை அடைய முடியும்" என்பதையும் உணர்ந்து நமக்கும் உணர்த்துகின்றார்.

"ஆதி அந்தம் அனந்தம் அற்புதம்
ஆன வானவர் தம்பிரான்
பாத மாமலர் சூடும் பத்தியில்லாத
பாபிகள் உய்த்திட
தீதில் நன்னெறி காட்டி எங்கும்
திரிந்து அரங்கன் எம்மானுக்கே
காதல் செய் தொண்டர்க்கு
எப்பிறப்பிலும்
காதல் செய்யும் என் நெஞ்சமே"
(பெருமான் திருமொழி 2- -6)

பாசுரம் - 7

"அடியார் தாளிணைக்கு ஒரு
வாரமாகும் என் நெஞ்சமே"

கார்மேகக் கூட்டங்களைப் போன்ற கரிய காயாம்பூ நிற மேனியையும்; நல்ல ஒளிவீசும் முத்தினைப் போன்ற அழகிய திருப்பல் வரிசையையும்; பவளம் போன்ற செந்துவர் வாயினையும்; முத்து மாலை அணிந்த மார்பினையும் , உடையவரான திருவரங்கனின் திருமேனி அழகினைத் திருமாலடியார்கள், கண்டுகளித்தனர்.

"என் உள்ளம் கவர்ந்தானை, அண்டர் கோன் அணியரங்கன் என்அமுதனைக் கண்ட கண்கள் மற்று ஒன்றினைக்

காணாவே எனும்திருப்பாணாழ்வாரின் அருளிச்செயல் இங்கு காணத்தக்கனவாகும்.

காரினம் புரை மேனி நல்கதிர் – முத்த
வெண்ணகைச் செய்யவாய்
ஆரமார்பன் அரங்க னென்னும்
அரும்பெரும் சுடர் ஒன்றினைச்
சேரும் நெஞ்சினராகிச்சேர்ந்து உகச்
சிந்தித்து இழிந்த கண்ணீர்களால்
வார நிற்பவர் தாளிணைக்கு ஒரு
வாரமாகும் என் நெஞ்சமே"
(பெருமாள் திருமொழி 2 – 7)

இத்தகையபெருமைவாய்ந்த பேரொளி. நிலையைச் சென்றடைய வேண்டும் என்ற மனத்தை உடையவராய் சென்று சேர்ந்து, நீர்பண்டம் போல் மனமுருகிக் கண்களில் ஆனந்தநீர்ப் பெருக்கெடுத்து நிற்கக்கூடிய நிலையை அடைந்தனர் திருமாலடியவர்கள். இத்தைய பெருமை வாய்ந்த திருமாலடியவர்களின் இரண்டு திருவடிகளை வணங்கி, அதில் என்மனம் ஈடுபட்டுள்ளது என்கிறார்குலசேகர ஆழ்வார்.

முனைவர். ஈ. பரந்தாமன்

பங்குனியில் அரன் அருள் பெற்ற நாயன்மார்கள்

தண்டியடிகள் நாயனார்–
பங்குனி – சதயம்

நேச நாயனார்–
பங்குனி– ரோகிணி

முனையடுவார் நாயனார்–
பங்குனி – பூசம்

காரைக்காலம்மையார்–
பங்குனி–சுவாதி

கணநாத நாயனார்–
பங்குனி – திருவாதிரை

பேரருள் நல்கும் பிரம்மபுரீசுரமான வழுவூர்

இராமனின் வெற்றிக்கு வழிவகுத்த இராமேசுவரம் தலம் போல, பிரம்மனின் வழு நீக்கிய தலமாக விளங்குவது, வழூர் பிரம்மபுரீஸ்வரர் தலமாகும். பல்லவர், சோழர், சம்புவராயர், விஜயநகர மன்னர், கேரள மன்னர் எனப் பலரும் திருப்பணி செய்த தலமாகவும், அருணகிரிநாதர் திருப்புகழ் பெற்ற தலமாகவும். இந்த வழூர் திகழ்கிறது.

பிரம்மா

பிரம்மாவிற்கும் விஷ்ணுவிற்கும் ஆணவத்தால் தங்களுக்குள் யார் பெரியவர் என்ற போட்டி ஏற்பட்டு, அப்போட்டி சிவபெருமானுக்கு முன் விவாதத்திற்கு வந்தது. அவர்களின் முன் ஒளிவடிவாய்த் தோன்றிய இறைவனின் ஆலோசனைப்படி, பிரம்மா திருமுடியைக் காண பறவை உருக்கொண்டு புறப்பட்டார். திருமாலோ வராக அவதாரத்தில் பூமியைக் குடைய ஆரம்பித்தார். முடிவில் இருவருமே அடி-முடியைக் காண இயலாமல் தோல்வி அடைந்தனர். சிவபெருமானே ஒப்பற்றவர் என்ற உண்மையை உணர்ந்தனர். இச்சம் பவத்தில் தாழம்பூவைப் பொய்சாட்சியாகக் கூறவைத்த பிரமன், தன் அகந்தையால் சிந்தை கலங்கி தான் செய்த குற்றத்தின் பயன், தன்னைத் தாக்காமல் இருக்க, அரன் சேவடி நினைந்து வழுவூர் வந்து தவமிருந்தார். பிரமன் தவமிருந்து பேறுபெற்றதால், இறைவன் பெயர் அயன்புரீஸ்வரர் என்றும், பிரம்மபுரீசுவரர் என்றும் அழைக்கப்படுகிறார்.

வழூர்

இன்றைய வழூர், ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து இரும்பேடு நாட்டு வழுகூர் என அழைக்கப்பட்டது.

பிரமன் தான் செய்த வழு (பிழை) தன்னை விட்டு விலகத் தவம் செய்த இடமானதால், இத்தலம் வழுவூர் என்று அழைக்கப்பட்டது. இப்பெயரே வழுவூர் என்றழைக்கப்பட்டு, இன்று வழூராக அழைக்கப்படுகிறது.

இத்தலத்து முருகனை அருணகிரிநாதர் தனது திருப்புகழில் பாடியுள்ளார். அண்மைக்காலத்தில் தவத்திரு பசுமலை சுவாமிகள் தங்கியிருந்து திருப்பணி செய்துள்ளார்.

கல்வெட்டுகள்

கி.பி. 1908 ஆம் ஆண்டு தொல்லியல் துறையினரால் எட்டு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவை நிருபதுங்கவர்மன் (கி.பி. 875), வீரராஜேந்திர தேவன் (கி.பி.1070), மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1195 முதல் கி.பி. 1216 வரை), மூன்றாம் இராஜராஜன் (கி.பி. 1233) மற்றும் (கி.பி.1239) காலத்தைச் சேர்ந்தவையாகும். இவை தவிர, வேறு சில கல்வெட்டுகளும் தற்போது கண்டறியப்பட்டுள்ளன. இதன் மூலம் பல்லவர், சோழர், விஜயநகர மன்னர்கள், சம்புவராயர்கள் கேரள மன்னர்கள் எனப் பலரும் திருப்பணி செய்ததை அறிய முடிகிறது.

இக்கல்வெட்டின் மூலம் இவ்வாலயம் மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் எழுப்பப்பட்டுள்ளது என அறியமுடிகிறது. முன்மண்டபம் விஜயநகர மன்னர்கள் காலத்தில் எழுப்பப்பட்டது. இவ்வாலயத் திற்கு மற்ற மன்னர்களைக் காட்டிலும் சம்புவராயர்களே அதிக அளவில் கொடை வழங்கியுள்ளனர். இவ்வாலயத்தில் கேரள மன்னன் ரவிவர்மன் குலசேகரனுடைய கல்வெட்டு, கிடைத்துள்ளது. இது காலக் கணக்கீடு குறிப்பிடும் கல்வெட்டு என்பது குறிப்பிடத்தக்கது. இதே போல, ஆலய வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய விஜயநகர மன்னர்களின் கல்வெட்டுகளும், அவர்கள் அளித்த கொடைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

ஆலய அமைப்பு

தெற்கு நோக்கிய ஆலய நுழைவாயில் இராஜகோபுரமின்றி அமைந்துள்ளது. உள்ளே நுழைந்ததும், விநாயகர் சந்நிதி

உள்ளது. அருகே சிறிய திருக்குளம் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது. அதனருகே கிழக்கு நோக்கிய முன்மண்டபம் பதினெட்டு முழுத்தூண்களுடனும் இரண்டு அரைத் தூண்களைக் கொண்டும் அமைந்துள்ளது.

இம்மண்டபம் ஏராளமான அழகிய புடைப்புச் சிற்பங்களுடன் அமைந்துள்ளது. இம்மண்டபம் விஜயநகர மன்னர்கள் காலத்தைச் சார்ந்தது எனக் கூறப்படுகிறது.

முருகப்பெருமானின் துணைவியான வள்ளியின் பிறப்பு – வளர்ப்புக்கதை, கண்ணப்ப நாயனார், காலசம்காரமூர்த்தி, பூசலார் நாயனார், சிறுத்தொண்டர் கதைகள் புடைப்புச் சிற்பங்களாக காணப்படுகின்றன. விநாயகரின் பல்வேறு வடிவங்கள், திருவாலங்காட்டுத்தாண்டவம், பிச்சாடனரின் உருவங்களும் புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டு உள்ளன.

இறைவன் கருவறையைச் சுற்றி உருண்டையான தூண்களைக் கொண்ட மண்டபத்துடன் கூடிய திருச்சுற்று அமைந் துள்ளது.

அதில் பரிவார தெய்வங்களும் அமைந்துள்ளன. கருவறைக் கோட்டத் தெய்வங்களாக தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா, துர்க்கை மற்றும் சண்டிகேஸ்வரர் அமைந்துள்ளனர்.

இக்கோயிலில் பிராமி, மகேசுவரி, இந்திராணி, வைஷ்ணவி, வராகி, கௌமாரி, சாமுண்டி என சப்தமாதர்களின் சிற்பங்கள் அர்த்த பத்மாசனத்தில் அமைத்திருக்கின்றனர்.

பிரம்மபுரீஸ்வரர்

பழங்காலக் கல்வெட்டில் இறைவன் பெயர் திரு அயனீஸ்வரம் உடையார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அயன் என்ற பெயர் பிரம்மனைக் குறிப்பதாகும்.

காலப்போக்கில் பிரம்மனின் பெயரிலேயே பெருமான் பிரம்மபுரீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். பிரம்மபுரீஸ்வரர் ஆலயம் கருவறை விமானம், அதிட்டானம், கவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி என ஆறு அங்கங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இது மூன்றாம் குலோத்துங்கனுடைய ஏழாவது ஆட்சி ஆண்டு (கி.பி. 12ஆம் நூற்றாண்டு) காலத்தைச் சார்ந்ததாகும். பிரம்மபுரீஸ்வரர் என்றும், அயன்புரீஸ்வரர் என்றும் அழைக்கப்படும் சதுர வடிவ ஆவுடையாராக வட்டமான ருத்ர பாகத்துடன் கூடிய சிவலிங்கம் கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறது. இவரே பிரமன் வழிபட்ட இறைவன் ஆவார்.

காமரசவல்லி

இறைவன் சந்நிதி முன்மண்டபத்தில் வடபுறம் தெற்கு நோக்கியவாறு இறைவியின் சந்நிதி அமைந்துள்ளது. எளிமையான கட்டட அமைப்புடன் கருங்கல்லினால் சுதைச் சிற்பங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அன்னை பத்ர பீடத்தின் மீதுள்ள பத்மபீடத்தில் திரிபங்க நிலையில் தலையில் ஜடாமகுடமும், காதுகளில் குண்டலங்களுடனும், கழுத்தில் உட்கழுத்துப் பொட்டு மற்றும் நிறைய அணிகலன்களுடன் நான்கு கரங்கள் கொண்டு மேலிரண்டு கரங்கள் தாமரையும் நீலோற்பலமும், கீழிரண்டு கரங்கள் அபய வரதம் அளிக்கும் நிலையிலும் அமைக்கப்பட்டுள்ளன. தென்முகம் நோக்கிவாறு அருள்வழங்குகின்றாள். இந்த அமைப்பு கி.பி. 15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறப்படுகிறது.

சுப்பிரமணியர்

விஜயநகர மன்னர்களின் விருப்பமான தெய்வமான சுப்பிரமணியருக்கு இவ்வாலயத்தில் தனிச் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. இந்த இறைவனே அருணகிரிநாதர் திருப்புகழில் பாடிய இறைவனாவார். பழைமையான சிற்பம் பின்னப்பட்டுள்ளதால், புதிய சிற்பம் நிறுவப்பட்டுள்ளது.

"வரிகோழிக் கொடி மீக்கொளும்படி
நடமாடிச் சுரர்
போற்றும் தண்பொழில் வழுவூர்
–எனவும்
"மருவூர் குளிர் வாவிகள், சோலைகள்
செழிசாலி குலாவிய
கார்வயல் வளமூதூர்,"

என அருணகிரிநாதர் இத்தலத்தினைப் புகழ்கின்றார்.

அமைவிடம்

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டத்தில், வழூர் அமைந்துள்ளது. மேல்மருவத்தூர்–வந்தவாசி சாலையில் வந்தவாசியிலிருந்து கிழக்கே ஒன்பது கிலோ மீட்டர் தொலைவில் மருதாடு என்ற ஊரிலிருந்து வடக்கே மூன்று கிலோ மீட்டர் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இதே போல, வந்தவாசி–உத்தரமேரூர் சாலையிலும் வந்தவாசி–மேல்மருவத்தூர் சாலையிலும் ஏராளமான பேருந்துகள் செல்கின்றன. மருதாடு என்ற ஊரில் இறங்கி, வடக்கே மூன்று கிலோ மீட்டர் பயணம் செய்தால் இவ்வூரை அடையலாம்.

விழாக்கள்

பிரதோஷம், பௌர்ணமி, கிருத்திகை போன்றவை எளிய முறையில் கொண்டாடப்படுகிறது.

தரிசன நேரம்

ஆலயத்தின் அர்ச்சகர் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே வந்து செல்வார் என்பதால், ஏமாற்றமின்றி தரிசிக்க, ஆலயத்தின் பின்புறம் தீபமேற்றுபவரின் (தீபக்காரர்) வீட்டை அணுகி இறைவனைத் தரிசிக்கலாம். பிரமன் அருளையும், பிரமன் வழிபட்ட இறைவன் அருளையும் பெற விரும்புவோர், வழூர் வந்து செல்வது அவசியம்.

படைப்பும் படங்களும்
பனையபுரம் அதியமான்.



கும்பகோணம் வட்டம், திருநாகேஸ்வரம், ஒப்பிலியப்பன் திருக்கோயில் குடமுழுக்கு விழா 8.2.2009 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலர்/ ஆணையர் திரு.த.பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள், தஞ்சை மாவட்ட ஆட்சியர் திரு.எம்.எஸ்.சண்முகம் அவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர் திரு.கு.சம்பத்குமார் அவர்கள் மற்றும் திரளான பக்த பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

குன்றத்தூர் - திருநாகேச்சுரம், அருள்மிகு நாகேச்சுரசுவாமி திருக்கோயில் எதிரில் 20.2.2009 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் சேக்கிழார் மணி மண்டபத்திற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டும், குழு ஆக்கிரமிப்பினை முறைப்படுத்தி ஆணை வழங்கியும் சிறப்பித்தார்கள்.
இவ்விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையுரையாற்றி சிறப்பித்தார்கள். திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.டி.யசோதா அவர்கள், வேலூர் மண்டல அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.கோ.பக்கிரிசாமி அவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.டி.துரைசாமி அவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருமால் அவதார ஸ்தலம் திருப்புல்லாணி

இராமநாதபுரம் மாவட்டத்தில், ராமநாதபுரம் அருகேதிருப்புல்லாணி என்னும் திவ்யதேசம் உள்ளது. இங்கு பெருமாள் ஆதி ஜெகநாதப் பெருமாள் எனும் பெயரில் கோயில் கொண்டுள்ளார்.

இத்திருப்பதி இராமநாதபுரத்திலிருந்தும், கீழ்க்கரையிலிருந்தும் எட்டு கி.மீ., தூரத்தில் அமைந்துள்ளது. இக்கோயில் 108 திவ்வியதேசத்தலங்களில் நான்காவதாகும்.

வேறு பெயர்கள்

திருப்புல்லாணி என்னும் இந்த திவ்யதேசத்துக்கு புல்லாரணியம், ஆதி சேது; திருவணை, தர்பசயணம் முதலான வேறு பெயர்களும் வழங்குகின்றன.

பெருமை வாய்ந்தது

இது 72 சதுர் யுகங்களுக்கு முன்பு தோன்றிய தலம் என்பர். அதையொட்டி இக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானுக்கு ஆதி ஜெகநாதன் என்ற நாமம் உண்டாயிற்று. இக்கோயிலின் அமைப்பை வைத்தே இது மிக பழமையான கோயில் என்பதை அறிந்து கொள்ள முடியும். தசரத சக்கரவர்த்தி புத்திர வரம் வேண்டி இக்கோயிலில் நாக பிரதிஷ்டை செய்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.

தல வரலாறு

சங்க காலம் முதல் இன்றுவரை திருப்புல்லாணி பெரும் புகழ் பெற்ற ஊராகக் திகழ்கிறது இது தீர்த்தம், மூர்த்தி, தலம், என்ற மூன்று சிறப்புகளையும் உடையதாகும்.

புராணப்புகழும், சரித்திரப் புகழும் வாய்ந்த இந்த திவ்விய தேசத்தை அனேக வரலாற்று நூல்கள் புகழ்ந்து பேசுகின்றன. திருமால் இராமபிரானாக அவதாரம் செய்தபோது இத்தலத்திற்கு வந்து ஆதி ஜெகநாதனை வணங்கி அவர் அளித்த கோதண்டம் என்ற வில்லைப் பெற்றே ராவணனை வதம் செய்தார் என்றும் இலங்கையைவென்று சீதாப்பிராட்டியை ஏற்றார் என்கின்றனர். ராமர் தன்னைச் சரண்அடைந்து விபீஷணனை இத்தலத்தில் அமர்த்தி இலங்கைக்கு அரசனாக முடிசூட்டினார் என்பது புராண வரலாறு.

கண்ணுவர், புலகர் போன்ற முனிவர்கள் ஆதி ஜெகநாதப் பெருமாளைச் சரணடைந்து பரமபதம் பெற்றதால் இத்தலம் சரணாகதித்துவம் விளைந்த விசேஷ தலமாகவும் போற்றப்படுகிறது.

ராமேஸ்வரம், தனுஷ்கோடி, தேவிபட்டினம் போன்ற புண்ணிய சேத்திரங்களுக்கெல்லாம் முக்கிய மூர்த்தியாக உள்ள ஆதி ஜெகநாத பெருமாள் அபயமுத்திரை காட்டும் கையுடன் இங்கு வீற்றிருந்து காட்சி தருவதை எல்லாவற்றிற்கும் மேலான திருக்கோலம் என்று கொண்டாடுகின்றனர். என்பது குறிப்பிடத்தக்கது.

பிற சிறப்புகள்

செழித்து வளர்ந்த அசுவத்த விருட்சமும் (அரச மரம்), பாம்புப்படத்தின் மீது நடனமாடும் ஸ்ரீ சந்தானக்கண்ணனும், தர்ப்பசயன ராமனும், மருத்துவ குணங்கள் நிறைந்த சக்ர தீர்த்தமும் இக்கோயிலின் சிறப்புக்களாகும். புத்திர பேறு இல்லாதவர்கள் இங்குள்ள சந்தான கோபால மூர்த்தியை வணங்கி, தெய்வம்சமுள்ள அரசமரத்தின் நிழலில் நாகப்பிரதிஷ்டை செய்து பாயாசம் நிவேதித்து அதை அருந்தினால் நிச்சயமாகப் புத்திரபேறு பெறுவர். என்பது உறுதியான நம்பிக்கையாகும்.

இத்தலத்தில் சர்ப்பசாந்தி, சர்ப்ப ஹோமம் முதலான சாந்திகளைச் செய்து ஏராளமானோர் நற்பயன் அடைந்து வருகிறார்கள். பிரதிஷ்டை செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான நாகப் பாம்பு சிலைகள் தல விருட்சமான அரசமரத்தடியில் இருப்பதைக் காணலாம்.

இக்கோயில் வாசலின் மீதுள்ள பெரிய ராஜகோபுரம், பெருமாள் சன்னதி விமானம், தாயார் சன்னதி விமானம், தர்ப்பசயன ராமன் சன்னதி விமானம், பட்டாபிராமன் சன்னதி விமானம், தாயார் சன்னதிக்கு எதிரில் உள்ள மொட்டை கோபுரம்,



ஸ்ரீ ஆண்டாள் சன்னதி விமானம் ஆகியவை இக்கோயிலின் சிறப்பு அம்சங்களுக்கு எடுத்துக்காட்டாகும்.

அரச மரத்தின் மகத்துவங்கள்

இக்கோயிலின் பின்புறம் நெடிது வளர்ந் துள்ள அரச மரம் மிகுந்த புனிதமுடைய தாகும் இதை மாபாபிகள் தரிசித்து வலம் வந்தாலும் நற்பயன் பெறுவர், இதனை வலம் வருவதன் மூலம் எடுத்த காரியங்கள் யாவற்றிலும் வெற்றி பெறலாம் என்பது பக்தர்களின் உறுதியான நம்பிக்கையாகும். புத்திர பாக்கியம் வேண்டுவோர் இம்மரத் தடியில் உள்ள மண்ணை எடுத்து அதனுடன் இம்மரத்தின் காய்ந்த பட்டையையும் சேர்த்து அரைத்துக் குழைத்து நெற்றியில் பூசி, மீதி இருப்பதை இதே சக்ர தீர்த்தத்தில் கரைத்து, அந்த நீரை குடித்து பின்னர். அரசமரத்தை வலம் வந்து இதன் அடியில் நாக பிரதிஷ்டை செய்வர். மருத்துவரீதியாக மற்ற மரங்களை விட அரச மரத்திற்கு பல ஏற்றங்கள் உண்டு.

குறிப்பாக திருப்புல்லாணி கோயிலிலுள்ள அரச மரத்திற்கு மேலும் பல ஏற்றங்கள் உள்ளன. இது வருவதை முன்கூட்டியே தெரிவிக்கும் சக்தி படைத்தது என்கின்றனர். அரச மரத்திலிருந்து ரத்த சொட்டு விழுதல், கிளை முறிதல், புகை கிளம்புதல், காரணமின்றி அசைவு ஏற்படுதல், சக்ர தீர்த்தத்தின் நீர் கலங்குதல் முதலிய தீய சகுனங்கள் ஏற்பட்டால் நாட்டுக்குத் தீமை ஏற்படும் என்றும், அப்போது வைகானஸ முறைப்படி இம்மரத்தடியில் சாந்தி ஹோமம் செய்ய வேண்டும் என்றும் கூறப்படுகிறது. இம்மரத்திலிருந்து பால்பெருகினாலும், சக்ர தீர்த்தத்தின் நீர் தெளிவாக இருந்தாலும் நாட்டிற்கு நன்மை ஏற்படும் என்றும் கூறப்படுகிறது.

சேதுபதிகளின் திருப்பணிகள்

இவ்வளவு பெருமைகள் வாய்ந்த இக்கோயில் கொண்ட பெருமாளுக்கு முன்னாள், சேதுபதிகள் பெருந்திருப்பணிகள் செய்திருப்பதுடன் நித்திய பூஜை திருவிழாக்கள் நடைபெற நிலங்களை தானமாக வழங்கியுள்ளனர்.

திருமங்கை ஆழ்வார் புகழ்ந்து பாடிய திருப்புல்லாணி

திருமங்கை ஆழ்வார் நாலாயிர திவ்விய பிரபந்தத்துள், சிறப்புப் பெற்ற திருமொழியில் 20 பாசுரங்களால் ஆதி ஜெகநாத

பெருமாளை போற்றித் துதித்துள்ளார்.

சிறப்பு பெயர்கள்

இப்பெருமாளுக்கு தட்சண ஜெகநாதன், சொரூப ஜெகநாதன் என்ற சிறப்பு பெயர்களும் உள்ளன.

திருவிழாக்கள்

ஆதி ஜெகநாத பெருமாள் கோயிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து பெருமாளை தரிசித்துச் செல்கின்றனர். ராமநாதபுரம் அரண்மனை, தேவஸ்தானத்தின் ஏற்பாட்டின்படி நிறுவியுள்ள அறக்கட்டளைகள் மூலம் திருவிழாக்கள் சிறப்பாக நடந்து வருகிறது.

இவற்றில் குறிப்பிடத்தக்கவை

ஸ்ரீ பட்டாபி ராமன் பிரமோத்ஸவம், ஆதி ஜெகநாத பெருமாள் பிரமோத்ஸவம், திருப்பவித்ரோத்ஸவம், பகற்பத்து இராப்பத்து, ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி – சொர்க்க வாசல் திறத்தல் இவை தவிர சிறிய விழாக்களில் கோயிலுக்குள் பெருமாள் புறப்பாடும் நடக்கின்றன.

ஸ்ரீ சந்தான கோபாலன் சன்னதி

தர்ப்பசயன ராமர் சன்னதிக்கு, வடக்கு பகுதியிலுள்ள வெளிமண்டபத்தில் ஸ்ரீ சந்தான கோபாலன் எழுந்தருளியுள்ளார். இதற்கு நாகர் மண்டபம் என்ற பெயரும் உண்டு. பெரிய ஆமைமீது 8 யானைகள் 8 நாகங்கள், தாங்கும் யோகாசனத்தின் மீது விளங்கும் ஸ்ரீ ஆதிசேஷன் ஸ்ரீ கண்ணன் (பெரிய மூலவர் வடிவாக) எழுந்தருளி சேவை சாதிக்கிறார். இவரை முன்னாளில் பித்ருக்களின் மகிழ்ச்சிக்காகவும், புத்திர பாக்கியத்திற்காகவும், தசரதர் பிரதிஷ்டை செய்தார் என்று தலக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்குள்ள எம்பெருமானை வணங்கி, நாக பிரதிஷ்டை செய்தால் குழந்தை பாக்கியம் நிச்சயம் கிடைக்கும் என நம்பப்படுகிறது. பல ஊர்களிலிருந்து பக்தர்கள் இங்கு வந்து கண்ணனின் முன்பு சர்ப்ப சாந்தி, சர்ப்ப ஹோமம் முதலான வைதிகச் சடங்குகளை செய்து நற்பயன் அடைந்து வருகிறார்கள். அவ்வாறு இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான நாகப்பாம்பு சிலைகள் தல விருட்சமான அரச மரத்தின் அருகில் வைக்கப்பட்டுள்ளன.

தர்ப்பசயன ராமன்

தர்ப்பசயன ராமன் புஷ்பக விமானம் என பெயர்கொண்ட ஸ்ரீ விமானத்தின் நடுவில் பள்ளி கொண்டுள்ளார். தர்ப்பப்புல்லில் படுத்திருப்பதால் இவருக்கு தர்ப்பசயன ராமன் என திருப்பெயர் வழங்குகிறது. பெருமாள் சன்னதியின் மணிவாசலில் உள்ள துவாரபாலகர்களின் தோற்றம் வேறு எங்கும் காண முடியாத தனிச்சிறப்பாகும்.

இவர்கள் தடித்த மீசையுடன் அச்சம் தரும் தோற்றத்துடன் வானரப் போர்ப்படையினர் களை அழைக்கும் கம்பீர மிடுக்குடன் இரு பக்கங்களிலும் சேவை தருகின்றனர்.

வடக்கு பிரகாரத்தில் [விமானத்தின் நடுவில், பள்ளிகொண்டுள்ள பெருமாளின் திருவடிகளில் இருந்த களைந்து வைக்கப்பட்ட] திவ்விய பாதுகைகள் உள்ளன.

ராமன், சீதையை தேடிக்கொண்டு வந்தபோது, இங்கே 3 நாட்கள் புல்லில் இட்ட படுக்கையில் பள்ளிகொண்டார். விபீஷணனின் சொல்லுக்கிணங்க சமுத்திர ராஜனிடம் வழிவிட சரணாகதி செய்தார். இதனால்தான் இப்பெருமாளுக்குத் தர்ப்பசயன ராமன் என்ற திருநாமம் ஏற்பட்டது என்று புராணங்கள் கூறுகின்றன.

புண்ணியம் தரும் சேதுக்கரை

திருப்புல்லாணியிலிருந்து சுமார் 4 கி.மீ., தூரத்தில் சேதுக்கரை. எனுமிடம் உள்ளது. இதனை ஆதி சேது என்றும் அழைக்கின்றனர்.

திருப்புல்லாணிக்கு வரும் பக்தர்கள் இப்புண்ணிய கடற்கரையில் நீராடிவிட்டு கோயிலுக்கு வருவது வழக்கமாகும் ஆடி, தை அமாவசைகளின் போது இங்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீராடித் தங்கள் முன்னோர்களை வணங்குகின்றனர். இத்தகைய சிறப்புகள் கொண்ட திருப்பல்லாணி திவ்விய தேசததிற்கு சென்று ஆதிஜெகநாத பெருமாளை தரிசித்து வாழ்வில் வளம் பெறுவோம்.

*

கெடுவான் கேடு நினைப்பான்

எல்லோரும் உயர்ந்து வாழவேண்டும் என்று கருதுகிறார்கள். ஆனால் அதற்கு வழிவகை யாது என்று அறியாமல் திகைக்கின்றார்கள்.

உயர்வதற்கு வழி என்ன என்று திருவள்ளுவர் தெளிவாகக் கூறுகின்றார்.

ஒரு தாமரைக்குளம். அதில் உள்ள தாமரைமலர் உயர வேண்டும். அதற்கு என்ன வழி? நீர் உயர்ந்தால் மலர் உயரும். அது போல் நம் உள்ளம் உயர்ந்தால் நாமும் உயரலாம்.

"வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.:

எல்லோரும் வாழ வேண்டும் என்று எண்ணுகின்ற உள்ளந்தான் உயர்ந்த உள்ளம்.

உலகிலேயுள்ள உயிருள்ள பொருள், உயிரில்லாத பொருள், **(சராசரங்கள்)** யாவும் வாழவேண்டும். என்று, பிரார்த்தனை புரியவேண்டும். அநேகர் இப்படி எண்ணுவதில்லை. பிறருடைய உயர்வைக் கண்டு மனம் காந்துகின்றது! புழுங்கிப் பெருமூச்சு விடுகின்றார்கள்.

சிங்கபுரியில் சங்கன் என்பவன் வாழ்ந்தான். அவன் நல்ல பண்பாடு படைத்தவன். பிறருக்கு உதவி செய்யும் இயல்புடையவன். எல்லோரிடத்திலும் அன்பாகப் பழகுவான். மனம், மொழி, மெய் என்ற திரிகரணங்களாலும் தூயவன். அவன் நல்லவிதமாக வியாபாரம் செய்தான். சிறிது சிறிதாகச் செல்வம் சேர்ந்து தழைத்தது.

சங்கனுடைய வீட்டுக்கு எதிர் வீட்டில் சிங்கன் என்பவன் வாழ்ந்தான். அவன் பொறாமைப் பேய் பிடித்தவன். அடுத்தவர்களின் நல்வாழ்வைக் கண்டால் அவனுக்கு அக்கினித் திராவகத்தை உண்டது போலிருக்கும். அவன் மனத்தில் கொடுமைக்குணம் தலை விரித்தாடியது. அந்தப் பாதகன், சங்கனுடைய நல்வாழ்வைக் கண்டு புழுக்கம் கொண்டான்.

'இந்தப் பயலுக்கு இத்தனை செல்வமா! வண்டியும் வாகனமும் நிலமும் புலமும் தோட்டமும் துரவும் – ஆம்! இவன் எப்படி உயர்ந்து வாழ்கின்றான்? இவன் நாசமாய் போக! இவனுக்கு நோய் வரக்கூடாதா? என்று எண்ணி எண்ணி., ம்.., என்று பெருமூச்சு விடுவான்.

சிந்தனைக் கடலில் மூழ்கினான். கரை காணாது அயர்ந்தான் கடைசியில் அவனுக்குத் திடீர் என்று ஒரு புதிய யோசனை வந்தது.

அந்த ஊருக்கு மூன்றாவது மைலில் ஒரு மலை, அந்த மலையடிவாரத்தில் குள்ளன் என்ற கள்ளன் இருந்தான். சிங்கன் அவனிடம் போய், "குள்ளா உனக்கு ஐந்நூறு ரூபாய் தருகிறேன். என்னுடைய எதிர் வீட்டைத் தீ வைத்துக் கொளுத்தி விடு!" என்றான்.

"ஐயா உங்கள் வீடு எனக்குத் தெரியாதே உங்கள் வீடு தெரிந்தால் தானே உங்கள் எதிர் வீடு எனக்குத் தெரிய முடியும்? நான் பகலில் வெளியே வரக்கூடாது. என்னை அரசாங்கம் தேடிக் கொண்டிருக்கின்றது. என்ன செய்வேன்!" என்றான் குள்ளன்.

"அப்பா, நீதான் இந்தக் காரியத்தைச் செய்ய வல்லவன். ஆனால் இது முக்கியமான

காரியம். ஒரு கோயில் கட்டிய மாதிரி அப்பா. உனக்கு நிரம்பப் புண்ணியம் வரும், அந்த அயோக்கியன் தொலைய வேண்டும்!" என்றான் சிங்கன்.

கள்ளன். "ஐயா! ஒன்று செய்யுங்கள், இதோ காகிதத்தால் ஒரு தாமரைப்பூ செய்து வைத்திருக்கின்றேன். நல்ல வர்ணக் காகிதம். அழகானது! இதை அமாவாசையன்று இரவு உங்கள் எதிர் வீட்டு ஓட்டில் செருகி வைத்து விடுங்கள். நான் இரவு ஒரு மணிக்கு வந்து, தாமரைப் பூவை அடையாளம் வைத்துக் கொளுத்தி விடுவேன்" என்றான்.

"பேஷ்! இது நல்லயோசனை, ஹா! ஹா! இந்தா ஐந்நூறு ரூபாய்! மண்ணெண்ணெய் தாராளமாக வாங்கிக் கொள். சாராயத்திற்குப் பத்து ரூபாய். உன் இனாம் எல்லாம் மொத்தமாக ஐந்நூற்று இருபத்தைந்து வைத்துக் கொள் நீ செய்யும் உதவியை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன்" என்று பணத்தைக் கொடுத்தான். தீவைக்கும் வீட்டை வெளியே இருந்து பூட்ட இரு பூட்டுக்கள் வேறு வாங்கிக் கொடுத்தான். தாமரைப்பூவை வாங்கிக் கொண்டு சிங்கன் வீட்டுக்கு வந்தான்.

அவன் மனைவி, " இது என்ன பூ?" என்று கேட்டாள், "அடியே! இது ஐந்நூற்று இருபத்தைந்து ரூபாய் விலை. இது ஒரு மந்திரப்பூ. இதன் மகிமை உனக்குத் தெரியாது. இது நமக்கு ஷேமத்தைக் கொடுக்க வந்திருக்கின்றது" என்றான்.

இரவு பத்துமணி, ஊரடங்கிவிட்டது. சங்கன்தன் வீட்டில் முருகக் கடவுளை வணங்கிவிட்டு படுத்துக்கொண்டான்.

மணி பத்து-முப்பது. மெல்லச் சிங்கன் வெளியே வந்தான். சங்கனுடைய வீட்டு ஓட்டைச் சற்றுத் தூக்கி அந்தத் தாமரைப் பூவைச் செருகி வைத்தான். அப்போது அவனுக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவேயில்லை. ஒரு பக்தன் திருக்கோயிலைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்து பஞ்சமூர்த்திப் புறப்பாடு முடித்துப் படுக்கும் போது, அந்த உத்தம பக்தனுக்கு மனத்தில் எத்தனை மனநிறைவு அவனுக்கு உண்டாகுமோ அத்தனை நிறைவு அவனுக்கு உண்டாயிற்று.

சண்டாளன் தொலைந்தான்! எரிந்து கரிந்தான்! கூண்டோடு கைலாசம்! ம்.. என்ன வாழ்வு! பெருமை! எல்லாம் நாளையுடன் முடிந்தது. இடிவிழுந்தது போல் தொலையட்டும் என்று நினைத்து ஆனந்தத்தால் துள்ளினான். அவன் உள்ளம் பெரிதும் கிளுகிளுத்தது. அமைதியாகச் சென்று கதவைச் சாத்தித் தாளிட்டுப் படுத்தான். நடு இரவு பல்லிகள் கிளுகிளு என்று சொல்லின. கோட்டான்கள் பயங்கரமாகக் கத்தின. அங்கும் இங்கும் நாய்கள் குரைத்தன எங்கும் ஒரே இருட்டு பயங்கரமான அந்த இருளில் கரிய உடை உடுத்திக்கொண்டு குள்ளன் புறப்பட்டான்.

சிங்கனுடைய மனைவி பன்னிரண்டு மணிக்குச் சிறுநீர் கழிக்கும் பொருட்டு வெளியே வந்தாள். அந்தத் தாமரைப்பூ எதிர்வீட்டில் செருகியிருக்கப் பார்த்தாள்! 'ஆ-ஆ! இது மந்திரப்பூ! இது மந்திரப்பூ! அதிர்ஷ்டப்பூ! இது எப்படி எதிர்வீட்டுக்கு

வந்ததோ? ஓ! மந்திர சக்தியால் வந்தது போலும்' என்று எண்ணி அந்தப் பூவை எடுத்துத் தன் வீட்டு ஓட்டில் செருகி வைத்தாள். கதவைத் தள்ளிவிட்டுக் கொண்டு உள்ளே போய் படுத்தாள்.

சரியாக ஒருமணி. குள்ளன் வந்தான். எங்கே தாமரைப்பூ இருக்கின்றதென்று பார்த்துக் கொண்டு வந்தான். அவனுக்கு எது சங்கன் வீடு எது சிங்கன் வீடு என்று தெரியாது. பூவுள்ள வீட்டில் தீ வைக்க வேணும் என்பதுதான் அவனுடைய குறிக்கோள். அவனுக்கு ஐந்நூற்று இருபத்தைந்து ரூபாய் கொடுத்த சிங்கன் வீட்டிலேதான். அந்த மந்திரப்பூ அழகு செய்து கொண்டிருந்தது.

தெருக்கதவிலும் தோட்டத்துக்கதவினிலும் உள்ள நாதாங்கியில் பூட்டுகளைப் பூட்டினான். வெளியிலே ஒருவரும் தப்பித்து வராமல் இருக்கவே அவ்வாறு பூட்டினான். பூட்டு வாங்கிக் கொடுத்த புண்ணியவான் வீட்டுக்கே அது உபயோகமாயிருந்தது. நாலா பக்கங்களிலும் கூரை மீது மண்ணெண்ணெயை ஊற்றினான். தீக்குச்சியைக் கிழித்து வைத்தான். பாண்டவர்களுக்காகத் துரியோதனன் கட்டிய அரக்கு மாளிகை போல் அந்த வீடு 'குபீர்' என்று பற்றியது. நாலாபக்கங்களிலும் அக்கினி ஜ்வாலை விட்டு எரியலாயிற்று.

சிங்கனும் அவன் மனைவியும் குழந்தைகளும் எழுந்து அலறினார்கள். உள்ளே புகை கப்பிக் கொண்டது. மூச்சு முட்டியது. கதவைத் திறக்க முடியவில்லை; இப்படியும் அப்படியும் ஓடினார்கள். "ஐயோ! ஐயோ!" என்று கதறினார்கள்; பதறினார்கள். "சங்கன் வீட்டுக்குத்தானே தீ வைக்கச் சொன்னேன்? என்வீடு எரிகின்றதே! தெய்வமே! என்கெட்ட எண்ணம் என்னையே அழித்து விட்டதே! 'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற பழமொழி எனக்கே பலித்ததே!" என்று வாய்விட்டுக் கூறியழுதான். அக்கினி பகவான் விடுவானோ? அந்த வீட்டையும் அவனையும் அவன் மனைவி மக்களையும் உயிருடன் எரித்துச் சாம்பலாக்கி விட்டான்.

ஆதலால், 'நன்மையும் தீமையும் தான் தரவருமே, "எல்லோரும் வாழ்க!" என்று எண்ணும் உயர்ந்த உள்ளம் படைத்தவன் இனிது வாழ்வான். ஆகவே வாழ்வதற்கு வழி பிறரை வாழ வைப்பதே. வாழ்க அறம்!

மே முதல் செப்டம்பர் வரை மாதம் ஒரு குழு புறப்படுகிறது.
திருக்கயிலை பயணத்திற்கு சம்பள ஆட்கள் அனுப்புவதில்லை.
10 ஆண்டுகள் அனுபவமுள்ள நாங்களே உங்களுடன் சேவை செய்யவருகின்றோம்.
காசி - கயா - அலகாபாத் - 10நாட்கள் ஒவ்வொரு மாதமும் புறப்படுகிறது.
நவசோதிர்லிங்கம் - ஷீரடி - பண்டரிபுரம் - துவாரகை 15 நாட்கள் மாதம் ஒருகுழு புறப்படுகிறது.
முக்திநாத் - நேபாள் - போக்ரா - 10நாட்கள் மாதம் ஒருகுழு புறப்படுகிறது.
கேதார்-பத்திரிநாத் - கங்கோத்ரி - யமுனோத்திரி 16 நாட்கள் மாதம் ஒருகுழு புறப்படுகிறது.
அந்தமான்தீவுக்கு 5/8 நாட்கள் சதுரகிரி 2 நாட்கள் வாரம் ஒருகுழு புறப்படுகிறது.
சிம்லா - குல்லு-மணாலி -12 நாட்கள் மாதம் ஒருகுழு புறப்படுகிறது.
அமர்நாத் பனிலிங்கம் தரிசனம் -15 நாட்கள் ஜூன்-ஜூலை மாதங்களில் புறப்படுகிறது.
மந்த்ராலயம்-ஸ்ரீசைலம்-நவபிருந்தாவனம் -5 நாட்கள் மாதம் ஒருகுழு புறப்படுகிறது.
கொல்கத்தா-டார்ஜிலிங்-கேங்கடாங்-12 நாட்கள் மாதம் ஒருகுழு புறப்படுகிறது.
சிங்கப்பூர்-மலேசியா - 6 நாட்கள் மாதம் ஒருகுழு புறப்படுகிறது.
தாங்கள் ஒருகுழுவாக இருப்பின் தாங்கள் விரும்பும் இடங்களுக்கு விரும்பும்தேதியில் சுற்றுலாக்கள் யாத்திரைகள் நடத்தி தருகின்றோம். அனைத்து உள்நாடு,வெளிநாடுசுற்றுலாக்களுக்கு அணுகவும்.

மனோகர் டிராவல்ஸ்
2/176, பெரியண்ணவீதி, ஈரோடு - 638 001.
0424- 2269940 செல் : 94433-80159

கைலாஷ் டிராவல்ஸ்
பெரியமேட், சென்னை - 600 003.
42053923 செல் : 9443380154
கயிலைமணி ஆறுமுகம், திருநெல்வேலி
செல்- 9994027188
கயிலைமணி சரவணன், திருச்சி
செல் - 9842038933
சிவத்திரு பிரின்டெக் மணி, மதுரை
செல் - 9443519314

உலகம் உய்ய உதித்த உடையவர்

பெ. ராமநாதபிள்ளை,
செயல் அலுவலர், திருமூர்த்திமலை
உடுமலை வட்டம்.

– சென்ற இதழ் தொடர்ச்சி...

முதலியாண்டார், திருக்கோட்டியூர் நம்பிகளிடம் வருவதற்கு முன்பு, உடையவரின் அடியார்களில் உயர்ந்த குலத்தாலும், ஞானத்தாலும், செல்வத்தாலும் தலைவராக விளங்கியதால் முக்குறும்புகளை ஒழித்துவிட்டு மீண்டும் வருவாயாக என ஞானத்தினால் திருக்கோட்டி நம்பிகள், முதலியாண்டாரிடம் அவ்வாறு கூறி அனுப்பினார்.

ஸ்ரீரங்கம் வந்தடைந்த முதலியாண்டாரிடம் உடையவர் "திருக்கோட்டி நம்பிகள் சரம சுலோகத்தை அருளிச் செய்தாரா" என்று வினவவும், முதலியாண்டார் நடந்ததை எல்லாம் உடையவரிடம் கூறி, "அடியேனை விட்டு மூன்று செருக்குகளும் எப்பொழுது நீங்கும்" என மிகவும் மனம் கசிந்து அழுதார். இராமானுஜரும் முதலியாண்டாரிடம் "முக்குறும்புகளை கடந்தால்தான் சரம சுலோகத்தை பெற அருகதை உண்டாகும் எனக்கூறி" பொறுத்திரு" என்று கூறினார் முதலியாண்டாரும் நல்ல நேரம் வரும் எனப் பொறுத்திருந்தார்.



முதலியாண்டான் திருக்கோட்டியூருக்கு சென்றிருந்த சமயத்தில், பெரிய நம்பியின் மகள் அத்துழாய்க்கு ஒரு துன்பம் ஏற்பட்டது. அத்துழாய் தன் மாமியாரின் கொடுமை களுக்கு ஆளாகி துன்பப்பட்டு கொண்டிருந்தாள். ஒரு நாள் தனக்கு குளத்தில் நீராட போக வேண்டி தன் மாமியாரை துணைக்கு வர வேணும் என அழைக்க அவள் மாமியார் " உன் சீதன வெள்ளாட்டியை கூட்டிக்கொண்டு போ" என கடிந்துசொல்ல, அத்துழாய் அதனைத் தன் தந்தையாகிய பெரியநம்பியிடம் சொல்ல பெரிய நம்பிகள் அதனை உடையவரிடம் தெரிவிக்க, குருவின் மகளுக்கு ஏற்பட்ட துன்பத்தை துடைக்க உறுதிபூண்டு அத்துழாய் கணவரின் குடும்பத்திற்கு பணிவிடை செய்ய, முதலியாண்டாரை அழைக்க, அத்துழாயிடம் "இதோ சீதன வெள்ளாட்டி" என்று முதலியாண்டாரைக் காட்டினார்.

முதலியாண்டாரும் மிகவும் மனம் மகிழ்ந்து, அத்துழாயுடன் சென்று, அவன் கணவரின் குடும்பத்தாருக்கு முகம் சுளிக்காமல் தொண்டு செய்தார். பின்னிட்டு முதலியாண்டார் என்ற அந்த மகான் தான், நம் வீட்டில் பணிவிடை செய்தது என்று அறிந்து, அத்துழாய் கணவர் குடும்பத்தினர் வருந்தி தங்களை மன்னிக்க வேண்டினர்.

பணிவிடை செய்த முதலியாண்டாரின் பரிபக்குவத்தை அறிந்த உடையவர் "இனிமேல் நீ புறப்பட்டு திருக்கோட்டியூர் நம்பியிடம் செல், அவர் உனக்கு சரம சுலோகத்தை உபதேசிப்பார் எனக் கூறி மீண்டும்

முதலியாண்டாரை திருக்கோட்டி நம்பியிடம் அனுப்பி வைத்தார்.

மீண்டும் ஸ்ரீரங்கத்திலிருந்து, புறப்பட்டு திருக்கோட்டி நம்பியை வணங்கி நிற்கவும், முதலியாண்டாருக்கு அவரின் பரிபக்குவ நிலையை உணர்ந்த திருக்கோட்டியூர் நம்பி, தன் பெண்ணாகிய தேவகிப்பிராட்டியை முன்னிட்டு, அந்த சரம சுலோகத்தினை முதலியாண்டாருக்கு உபதேசித்தார்.

"சென்றனன் மீண்டு நம்பியை வணங்கித்
தேவகிப் பிராட்டி முன்னிலையாய்
அன்றது பெற்று மீண்டனன் எதிகட்(கு)
அதிபரும் அத்திறம் கேட்டாங்(கு)
இன்றெனக்(கு) அன்றோ பவித்திரத்
துடனே இலங்கு தண்(டு) எய்திடப்
பெற்றேன்
ஒன்றிய தவத்தாய் எனஉளம் மகிழ்ந்
தாங்(கு) ஓங்(கு) அரங்கத்தினில்
உறைய"

இராமானுஜ வைபம் பாடல் 402.

முதலியாண்டாருக்கு திருக்கோட்டியூர் நம்பி சரம சுலோகத்தை உபதேசித்தார் என்பதை கேள்விப்பட்ட உடையவர் மிகவும் மனம் மகிழ்ந்து "இன்று எனக்கல்லவா பவித்திரத்துடனே விளங்கக்கூடிய தண்டமும் கிட்டப்பெற்றது" என மகிழ்ந்தார். சன்னியாசியாகிய ராமானுஜருக்கு பூணுல் போன்று, கூரத்தாழ்வாரும், சன்னியாசி கையில் ஏந்தும் தண்டம் போன்று முதலியாண்டாரும், பிரியாது இருப்பவர்கள் என்று கருதும்படி, இவ்வாறு கூறி உடையவர் மகிழ்ந்தார்.

முதலியாண்டாரின் பரிபக்குவ நிலையைக் கண்ட, திருக்கோட்டியூர் நம்பி முதலியாண்டாருக்கு சரம சுலோக உபதேசம் செய்யாமல், "யதிராஜரிடம் கேட்டு உபதேசம் பெற்று கொள்ளும்" என மீண்டும் திருக்கோட்டியூர் வந்த முதலியாண்டரை திருப்பி ஸ்ரீரங்கம் அனுப்பி வைத்ததாகவும், நடந்ததையெல்லாம் முதலியாண்டார் மூலம் தெரிந்து கொண்ட உடையவரே, முதலியாண்டாருக்கு பரம ரகசியமான சரம சுலோகத்தை அருளிச்செய்தார் என்றும் குரு பரம்பரா, ப்ரபாவம் கூறுகிறது.

உடையவர் திருவரங்கத்துப் பெருமாளுக்குத் தொண்டு செய்துவரும் நாளில், உடையவரின் ஆசாரியரான திருக்கோட்டியூர் நம்பிகளும், மாசில் தவத்தையுடைய திருமாலை ஆண்டான் என்ற ஆளவந்தாரின் சீடரும், ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளினார்கள்.

இந்த திருமாலை ஆண்டான் என்ற மகான் சர்வதாரி ஆண்டு மாசி மாதம் மக நட்சத்திரத்தில் அழகர் ஆட்சிபுரியும் திருமாலிருஞ்சோலை என்னும் திவ்ய தேசத்தில் வாமநர் என்னும் நித்யசூரியின் அம்சமாய், பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ பிராமண குலத்தில் காச்யப கோத்திரத்தில் யஜுர்சாகையில் அவதரித்தார். இவருடைய இயற்பெயர் ஞானபூரணர் திருமாலை ஆண்டான் என்ற பெயர் வம்சபரம்பரையாய் வந்த பட்டப்பெயராகும்.

திருமாலை ஆண்டானின் மூதாதையர் களில், ஒருவர் கண்ணுக்கினியான் ஸ்வாமி என்பவராகும். இவர் மதுரைக்கு அருகிலுள்ள அழகர்கோயிலில் பணிபுரிந்து வந்தார். இவர் திருக்கோயிலில் பணிபுரிந்து வரும்நாளில், ஒருசமயம் அழகரின் திருமேனி அழகு குறைந்து கொண்டே வருவதைக் கண்டு கவலைகொண்டு, அதற்கான காரணத்தினை ஆராய்ந்து பார்த்த பொழுது சில மலையாள மாந்திரீகர்கள் மறைந்து கொண்டு அழகரை அபகரிக்க எண்ணு வதை உணர்ந்தார். மலையாள மாந்திரீகர் கள் கண்ணுக்கு மந்திரித்த மையினைப் பூசிக் கொண்டு, அதன்மூலம் பிறர் கண்களுக்கு தெரியாமல் மறைந்து வந்து, தினந்தோறும் பலிபீடத்தில் உள்ள பிரசாதத்தை உண்ணுகின்றனர் என்ற உண்மையினை அறிந்து கொண்டார். எனவே இவர்களுடைய இந்தச் செயலை வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில், ஒருநாள் பலிபீடத்தில் வைக்கும் சாதத்தில் அதிக அளவு மிளகாயைச் சேர்த்துவிட்டார். அதனை உண்ட மாந்திரீகர்களின் கண்கள் எரிச்சல் அடைந்து கண்ணீர் வரவும் அதை அவர்கள் துடைத்தபோது, கண்ணில் பூசப்பட்டிருந்த மந்திரித்த மை, கரைய, மை கரைந்ததும் அவர்களுடைய உருவம் எல்லாருடைய கண்களுக்கும் தெரியவர, பின்னர் அவர்களைத் திருக்கோயில் பணியாளர்கள் பிடித்து அரசரிடம் ஒப்படைக்கவும், அரசனும் அந்த மாந்திரீகர்களைத் தண்டித்தார். ஆக கள்ளழகரின் திருமேனி அழகினை அழித்து,

கள்ளழகரைக் கடத்த முயன்றமாந்திரீகர்கள் செயல்பாட்டினை வெளிப்படுத்தியதால் அன்று முதல் கண்ணுக்கினியான் சுவாமி திருமாலை ஆண்டான் என்ற சிறப்பு பட்டம் பெற்றார். அன்று முதல் அவர்வம்சத்தில் வந்தவர்கள் திருமாலை ஆண்டான் என்ற சிறப்புப் பெயரில் அழைக்கப்பட்டனர். அந்த வம்சத்திலே வந்த ஞானபூரணர் என்ற மகானும் திருமாலை ஆண்டான் என்ற சிறப்பு பெயரால் அழைக்கப்பட்டார்.

திருமாலை ஆண்டான் ஆளவந்தாரின் சீடர்களில் ஒருவர், ஆளவந்தாரிடமிருந்து திருவாய்மொழியின் அர்த்தத்தைக்கற்று உணர்ந்தவர்.

இவ்வாறு சிறப்புமிக்க திருமாலை ஆண்டானையும், திருக்கோட்டியூர் நம்பியையும் வணங்கி, "நீசனை ஆண்ட நிர்மல, அருள்வீராக" என்று உடையவர் வணங்கி எழவும், திருக்கோட்டியூர் நம்பி, உடையவரை நோக்கி "இன்று முதல் திருமாலை ஆண்டான் இடத்தில் நம்மாழ்வார் அருளிச்செய்த தமிழ் வேதமாகிய திருவாய்மொழிக்கு பொருள் கேட்பீராக" எனக் கூறித் திருமாலை ஆண்டானை நோக்கி "ஒப்பற்றவரே, இந்த இராமானுஜருக்குத் திருவாய்மொழியின் ரகசிய அர்த்தங்களை உபதேசித்தருளும்" –என்று அறிவுறுத்திவிட்டு திருக்கோட்டியூர் போய் சேர்ந்தார்.

திருக்கோட்டியூர் நம்பியின் அருளாணைப்படி, ஸ்ரீ இராமானுஜர் தமக்கு பவித்திரமும், தண்டமுமாய் விளங்கிய கூரத்தாழ்வாரும், முதலியாண்டாரும், உடனிருக்க பெருமைபொருந்திய நம்மாழ்வார் ஞானதிருஷ்டியினால் உணர்ந்து அருளிச் செய்த திருவாய்மொழியின் தத்துவ பொருளைத், திருமாலை ஆண்டான் அருளி செய்யக்கேட்டு நீர்ப்பண்டமாய் கசிந்து உருகினார்.

"சீரார் மாறன் தெரிந்துரைத்த
திருவாய் மொழியின் செழும்
பொருளை
ஏரார் அருள் சேர் ஆளவந்தார்
இசைத்த படியே எடுத்தெடுத்தாங்(கு)
ஆரா அமுதைத் திருமலை யாண்டான்
அருளிச் செயக்கேட்டு
நீராய் அலைந்து கரைந்துருகி எதிகள்
தலைவர்நினைவுறு நாள்".

–ஸ்ரீஇராமானுஜ வைபவம் பாடல் 406.

இவ்வாறு திருவாய் மொழியின் பாடலைக் கேட்டுக் கொண்டிருந்த நாளில் திருவாய் மொழியில் இரண்டாம் பத்து, மூன்றாம் திருவாய் மொழி பாசுரமான "ஊனில் வாழ்" என்ற பாடலுக்குத் திருமலை ஆண்டான் கூறிய விளக்கத்தின் பொருள் சரியில்லை என்பதை இராமானுஜர் உணர்ந்தார்.

"ஊனில் அறியாக் காலத்துக்(கு)
உரைப்பான் திருமால் தனை
ஆண்டான்
தேனுள் திகழும் துழாய்முடியாய்
சிறியேற்(கு) அறியாக்காலத்தே
ஞானப் பொருளைத் தந்தனை
அந்நலத்தைஅழிக்கும் பொருட்டாயோ
ஈனப் படுமிவ் உடலோடும் வைத்தாய்
என்றான் என இசைத்தான்".

ஸ்ரீஇராமானுஜ வைபம் பாடல் 407.

ஊனில் வாழ் உயிரே, தேன் ஒழுகும் துளசிமாலைஅணிந்த பெருமாளே சிறுவனாகிய எனக்கு அறியாத சிறுபருவத் திலேயே ஞானப்பொருளைத் தந்தாய் அந்த நன்மையை இல்லாமல் செய்வதற்காக இந்த உடம்போடு என்னை வைத்துள்ளாய், என நம்மாழ்வார் வருந்துவதாகத் திருமாலை ஆண்டான் விளக்கம் சொன்னார்.

திருமாலை ஆண்டான்கூறியபொருள் சரியில்லை என்பதை உணர்ந்த இராமானுஜர் இப்பாடலில் முன்னாலும், பின்னாலும் உள்ள பாடல்களை வைத்துப்பார்க்கும் பொழுது இப்பாடலுக்கு வேறுவிதமாகப் பொருள் கூறினால் நன்றாக இருக்குமே எனக் கூறவும் திருமாலை ஆண்டானும் அப்பொருளைச் சொல்லும் என்றார்.

இராமானுஜரும் இப்பாடலின் முன்பும், பின்பும் மகிழ்ச்சி தோன்றப் பேசிய நம்மாழ்வார் நடுவிலே ஒருபாடல் மட்டும் துன்பத்தை விளைவிக்கும் இழப்பாகப் பாடியுள்ளார் என்று சொல்வதைக் காட்டிலும் பொருத்தமான கருத்து என்னவென்றால் – அந்த வேதம்தமிழ் செய்தமாறன் நம்மாழ்வார் எம்பெருமாளி டத்தில் மாதேவன், ஒளி வீசுகின்ற சக்ராயுதத்தை உடையவனே, பாவியேன் உயிரே, அறியாமை ஆகிய பெரிய மாயையிலே உலவும் அடியேனுக்கு அறியாத

சிறு வயதிலேயே நல்வழியில் செல்லக்கூடிய ஞானத்தைக் கொடுத்துமெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களும் வெட்கப்படும்படியாகி நீங்காத பக்தியை எனக்குக்கொடுத்து உனக்கு அடிமைசெய்யும் வகையில் வைத்துள்ளாய், என்று எம்பெருமானை மகிழ்ந்து நம்மாழ்வார் கொண்டாடினார் என்று அதற்கு விளக்கம் கூறினார் இராமானுஜர்.

இதைக்கேட்ட திருமாலை ஆண்டான் இராமானுஜரிடம் முன்பு ஆளவந்தார் எங்களுக்கு இவ்வாறு அருளிச்செய்யக் கேட்டதில்லை. முன்னொரு காலத்தில் விஸ்வமித்திர முனிவர் திரிசங்குவிற்காக மற்றொரு தேவலோகத்தையும் இந்திரனையும் படைத்தது போல புதிதாக விளக்கம் சொல்லுகிறீரே என்று கூறினார்.

"என்பதை எதிகள் நாதர் இயம்பிடக்
கேட்ட போதே
அன்பினால் திருமால் தன்னை
ஆண்டவன் ஆளவந்தார்
முன்பெமக்(கு) அருளிச் செய்யக்
கேட்டிலம் முனிவன் முன்னாள்
துன்புறும்வெகுளிபொங்கத்
தொடங்கிய சிருட்டி போல".

ஸ்ரீராமானுஜ வைபம் பாடல் 411.

மேலும் நம்மாழ்வாரது தமிழ்மறை ஆகிய திருவாய்மொழியின் உட்கருத்திலே ஞானத்தினால் எங்கள் குருவாகிய ஆளவந்தார் காணாத உறுதியான பொருளை நீரே அறிந்து சொல்லுகிறீர் என்று சொல்லிவிட்டு திருவாய்மொழிக்குப் பொருள் சொல்லுவதை நிறுத்திவிட்டார். இதுகண்ட இராமானுஜர் திருமாலை ஆண்டான் சொன்ன பொருளைக்கேட்டு உண்மைப்பொருளை நான் உள்ளூர உணர்ந்து மனதுக்குள்ளே அடக்கி வைத்துக்கொள்ளாமல் என்னுடைய அறியாமையினால் வாயினால் பேசி என்னையே நான் கெடுத்துக் கொண்டேனே என்று வருந்தினார். மேலும் பெரும்பசியுடையவன் முன்பு பெரும் சோற்றைக் கொடுத்து அதை அவன் சாப்பிடும் நேரத்தில் வேறொருவன் பருந்தைக்காட்டிலும் வேகமாகச் சென்று அச்சோற்றைப்பறிக்கவும், அந்த சோற்றை பறிகொடுத்தவன் போல் இழந்து நிற்கிறேன் என்று வருந்தினான்.

"பெரும்பசி யாளன் முன்னே
பேரமுதத்தை இட்டிங்(கு)
அருந்தென வைப்ப வாரி ஆங்கவன்
அருந்தும் போதில்
பருந்தினும் விரையில் பற்றிப்
பறித்திடக் கொடுத்த தேபோல்
இருந்திருந்(து) ஆவி வாடி எதிகள்தம்
தலைவர் நைந்தார்".

இராமானுஜ வைபவம் பாடல் *414.*

ஆளவந்தாரின் திருஉருவத்தை மனதிலே வைத்து வாழக்கூடிய திருக்கோட்டி நம்பிக்கு திருவாய்மொழி விளக்க உரை நின்றுவிட்டதை அறிந்ததும் திருக்கோட்டி நம்பி உடனடியாக ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். ஸ்ரீரங்கம் வந்த திருக்கோட்டியூர் நம்பிகளை திருமாலை ஆண்டான் வரவேற்று அவ்விருவரும் ஓர் இடத்தில் அமர்ந்திருந்தனர்.

திருக்கோட்டி நம்பி, திருமாலை ஆண்டானைப் பார்த்து திருவாய்மொழி விளக்க உரை நடக்கிறதா, என்று கேட்டார். அதற்கு திருமாலை ஆண்டான் திருக்கோட்டிநம்பியிடம் இராமானுஜர் தாம் திருவாய்மொழிக்கு விளக்கம் சொல்லும் பொழுது இடைமறித்து விஸ்வாமித்திரர் படைப்பாக புதுசுபுதுசாக விளக்கம் சொன்னால் காலச்சேபம் எப்படி நடக்கும் என்று கேட்டார்.

அதுகேட்ட நம்பி பெரிதும் சிரித்து இராமானுஜருக்கும் உமக்கும் எந்தப் பாட்டிலே விவாதம் என்று கேட்டார். அதற்குத்திருமாலை ஆண்டான் "அறியாக் காலத்துள்ளே" என்ற பாட்டுக்கு ஆளவந்தார் அருளிய பொருளையும் தான் கூறியதையும் திருக்கோட்டி நம்பிக்கு எடுத்துரைத்தார். அதைக் கேட்ட நம்பி முற்காலத்தில் ஆளவந்தார் அருளிச் செய்ததை நாமும் கேட்டிருக்கிறோம் என்று கூறி மேலும் முன்பு ஆளவந்தார் உணராத கருத்து இராமானுஜர் நெஞ்சில் தோன்றாது என்பதில் நீர் உறுதியாக இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு ஒன்றுமே தெரியாத ஒருவனுக்கு தாமும் அறிவிக்கிறோம் என்ற எண்ணத்தை விட்டு எல்லாம் உணர்ந்த கண்ணபிரான் உலக நடைமுறைக்காக, சாந்தீபினி என்ற முனிவரிடம் கல்வி கற்றது போல இப்போழுது இராமானுஜர் உம்மிடம் விளக்கம் கேட்கிறார் என்று எண்ணிக்கொள்ளும் என்று திருமாலை ஆண்டானை சமாதானப்படுத்தினார்.

(தொடரும்)

தவத்திரு தண்டபாணி சுவாமிகள்

முன்னுரை:

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நம் தமிழ்நாட்டில் தோன்றிச் சிறந்து விளங்கிய சான்றோர்கள் பலர்! அவர்களுள் மிகவும் புகழ்ந்து போற்றத் தகுந்த ஓர் அருளாளராகத் தலைசிறந்து விளங்கிய பெருந்தகையார், தவத்திரு தண்டபாணி சுவாமிகள் அவர்கள் ஆவர்.

சுவாமிகள் திக்கெலாம் புகழும் திருநெல்வேலிப் பதியில், சைவ வேளாண் மரபில், செந்தில் நாயகம் பிள்ளை என்னும் பெரியவருக்கும். பேச்சிமுத்து அம்மை என்னும் பெருமாட்டிக்கும். *1839*–ஆம் ஆண்டில் அருமைத் திருமகனாராக அவதரித்தார். இவருக்குத் தாய் தந்தையர்கள் இட்ட பெயர் "சங்கர லிங்கம்" என்பது.

இவர் முருகப் பெருமான்பால் மிக்க பேரன்பு வாய்ந்தவராய், அவரையே தனது வழிபாடுகடவுளாகக் கொண்டிருந் தமையினால், முருகதாச சுவாமிகள் எனவும்; திருப்புகழ் பாடியருளிய ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளிடம் எல்லையில்லாத அன்பும் ஈடுபாடும் உடையவராய், அவரைப் போலவே அரிய இனிய சந்தச் செய்யுட்களை எளிதாகப் பாடும் ஆற்றல் பெற்று விளங்கியதனால், திருப்புகழ்ச் சுவாமிகள் எனவும்; திருநீறு பூசி உருத்திராக்கம் பூண்டு கீழாடை யுடுத்து கையில் தண்டு ஒன்றும் ஏந்திப் பழநியம்பதியில் எழுந்தருளி வீற்றிருக்கும் ஸ்ரீ தண்டாயுதபாணிப் பெருமான் போல யாண்டும் திருவுலாப் புரிந்து போந்தனராதலின் தண்டபாணி சுவாமிகள் எனவும் சிறப்பித்துத் தமிழ் மக்களாற் பெரிதும் பத்திமையுடன் போற்றப்படுபவர் ஆயினர்!

எண்ணவும் இயலாத கடினம் மிக்கனவும். அதியற்புத நலங்கள் பலவும் வாய்ந்தனவும் ஆகிய 'வண்ணம்' என்னும் அரிய தமிழ் செய்யுள் வகைகளுக்கு இலக்கணம் வகுத்து. அவற்றைப் பாடுதலில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இலராக ஒளிபரப்பி இயங்கிநின்றதனால், இவரை மகான் எனவும் வண்ணச் சரபம் எனவும் தமிழறிஞர்கள் வியந்து போற்றி மகிழ்ந்தனர்.

சமகாலத்துச் சான்றோர்கள்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், அருட்டிரு இராமலிங்க அடிகள், பழநியம்பதி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் போன்ற பல சான்றோர்கள், தவத்திரு தண்டபாணி சுவாமிகளின் சமகாலத்தவர்களாக விளங்கியிருந்தனர். அவர்கள் அனைவரும் நம் சுவாமிகள்பாற் பேரன்பு மிக்கவர்களாக விளங்கினர்.

நம் சுவாமிகளும் அவர்களைப் பெரிதும் உவந்து பாராட்டியிருக்கின்றனர்.

ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் தாம் பிற்றை நாளில் இராமலிங்க அடிகளார் எனத்தோன்றியருளினர் என்பது இவர் துணிபு.

இவ்வாறே யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்கள், தமது முன்னைப் பிறவியில் 'உச்சிமேற் புலவர் கொள்பவர்' எனத் தமிழறிஞர்கள் புகழ்ந்து போற்றிவரும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் பெருந்தகையாகப் பிறங்கியிருந்தவர் என்பதும் இவர்தம் கருத்து.

பழநியம்பதிக்கு அருகில் வாழ்ந்து வந்த மாம்பழக் கவிச்சிங்க நாவலர் தம்மைச் சந்தித்துப் பழகித் தம்பாற் பேரன்பு பூண்டு நின்றவர் என்றும்; தம்மை அவர் பலவாறு புகழ்ந்து போற்றுவர் என்றும், தற்புகழ்ச் சியாதல் கருதி அப்புகழுரைகளைச் சொல்லிக் கொள்ளத் தாம் விரும்பவில்லை என்றும், சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

சென்னையில் அக்காலத்தில் சிறந்து

விளங்கிய புலவர் பெருமக்களுள், மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் என்பவரும். புரசைப்பாக்கம் அட்டாவதானம் சபாபதி முதலியார் என்பவரும் மிகவும் புகழ் வாய்ந்திருந் தவர்கள்.

முன்னையவர்தாம் தேவார அடங்கன் முறையினை ஓலையேடுகளினின்று பரிசோதித்துத் திருத்தமுற அச்சிற் பதிப்பித்து உலகுக்கு வழங்கிய பெருமைக்கு உரியவர்; இராமலிங்க அடிக்ளார் சிறு பிள்ளையாக இருந்தபோது, இவரிடமே கல்வி பயில அனுப்பி வைக்கப்பட்டவர் என்பர்; இவர் நம் சுவாமிகளை விட வயதில் முதியவராகப் பழுத்த பழமாக அப்பொழுது வாழ்ந்து வந்தார். பிள்ளையவர் பல நூல்களின் ஆசிரியரும், மேற்குறித்த பெருந்தகையாரின் மாணாக்கரும் ஆவர்.

சென்னைக் கந்தகோட்டத்து முருகனைக் குறித்துப் பிள்ளைத்தமிழ் பாடி அரங்கேற்றியபோது, இவ்விரு பெரும்புலவர்களும், வருகைதந்து சிறப்பித்தனர்கள், மேற்படி பிள்ளைத்தமிழ் அரங்கேற்றத்தின்போது பல வினாக்களை எழுப்பிச் சுவாமிகளை விளக்கங்கள் கேட்டனர்; அப்போது அவர் 'அருந்தவர்பாற் பேசும் முறை பிழைத்து இரண்டொரு சொல்' சொல்லவும் நேர்ந்தது. எனினும் சுவாமிகள் அவரைத் தவறாகக் கருதாமல் தக்க விடைகள் கூறி மகிழ்வித்தனர், மேலும் முதலியார் செய்த வாதம் மிகவும் தகுதியுடையதே, அவருடைய பெருமையினை யான் நன்கு அறிவேன், அவரை எளியவராக எண்ணி விடாதீர்கள்! அவர் துரோணாசாரியர் போன்றவர். அவர் மாணவர் ஆகிய அட்டாவதானம் சபாபதி முதலியாரோ, காண்டீபன் (அருச்சுனன்) போன்ற சிறந்த புலமை வீரர்' என்றும் நம் சுவாமிகள் குறிப்பிடுகின்றார்கள்.

இங்ஙனமே சென்னையில் வாழ்ந்திருந்த அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தர யதீந்திரர், வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முனிவர், அரன்வாயல் வேங்கட சுப்புப் பிள்ளை, திருநெல்வேலி அழகிய சொக்கநாதப் பிள்ளை, தேவகோட்டை வன்றொண்டன் செட்டியார் போன்ற சான்றோர்கள் பற்பலர். சுவாமிகளிடம் மாணவர்களாகப் பழகிப் பயின்று. நலங்கள் பல பெற்றுச் சிறந்து திகழ்ந்தனர். இன்னோரனைய செய்திகள் பலவும் நம் சுவாமிகளின் அருமை பெருமைகளை நன்கினிது உணர்த்துவன ஆகும்.

முருகபக்தி:

சுவாமிகள் முருகப் பெருமான் பாற்பேரன்பு பூண்டவர். 'முனிவர்களில் அகத்தியரும், மலைகளிற் பொதியமலையும், படைகளில் வேற்படையும், கொடிகளில் சேவற்கொடியும், மொழிகளில் தமிழ்மொழியும்போல, முருகன் தெய்வங்களுள் தலைசிறந்த பெருமான்' என்று சுவாமிகள் சுவைபெருகக் கவிபாடுவர்.

காமுகரிற் சசிபோலும், கடவுளரிற்
குகன் போலும், கவினார் தீஞ்சொற்
பாமுதிர்பல் கலைப்
பெருக்கில் தமிழ்போலும்,
கொடைநலத்திற் பரமன் போலும்,
தீமுனைஆ யுதத்திரளில் வேல்போலும்,
பதாகைகளிற் சேவல் போலும்,
மாமுனிவர் குலத்தில்அகத் தியன்
போலும்,
மலையினத்தில் மலயம் மாதோ.
[சசி–சந்திரன், பரமன்–சிவபெருமான்,
பதாகை–கொடி, மலயம்–பொதியமலை]

ஒருசமயம் சுவாமிகள் இராமநாதபுரம் சமஸ்தானத்துக்குச் சென்ற போது, சேதுபதி மன்னர் அவர்கள், "கண், விண், பெண் பொன்பண், கனி" என்னும் ஈற்றடியைக் கொடுத்துப் பாடியருளக் கேட்டார். அந்த ஈற்றடியை முருகனுக்கே பொருந்தும்படி வைத்துச் சுவாமிகள் ஆசுகவியாகவும், நிரல்நிறை என்னும் அணிநலம் அமையவும், ஓர் அழகிய வெண்பாப் பாடியருளினர். அது

முருகனுக்கு மூவாறு முன்பு தொட்டுக்
காத்தல்
உருகுமயல் ஈதல் உறுபூண்–
பெருகுசெவி
யுண்மகிழ்ச்சி சேர்ப்ப துலகதனைச்
குழவிடல்
கண்விண்பெண் பொன்பண் கனி

[முருகனுக்கு மூவாறு கண்கள்; அவன் முன்னொரு காலத்தில் தொட்டுக் காத்தருளியது விண் உலக அரசுரிமை; அவனுக்கு உருகும் மயல் ஈபவள் வள்ளியம்மையாகிய பெண்; அவனுக்கு ஏற்ற அணிகலன்கள் பொன்; அவனுடைய செவிகளுக்கு மகிழ்ச்சியை விளைவிப்பது அடியார்களின் துதிப்பாடல் ஆகிய பண்; அவனை உலகைச் சூழ்ந்து வலம்வரச் செய்தது மாம்பழம் ஆகிய கனி என்பது பொருள்.]

சமய சமரசஞானம்:

இங்ஙனம் சுவாமிகள் முருகன்பாற் பேரன்பும் ஈடுபாடும் மிக்க விளங்கினராயினும், சமய காழ்ப்பு சிறிதும் இன்றிச் சமரச நெறியைப் போற்றுதலில் சுவாமிகள் பெரிதும் கருத்தூன்றி யிருந்தனர். சமய வாதங்களையும் பேதங்களையும் நம் சுவாமிகள் அறவே வெறுத்தொதுக்கினர். 'என்னுடைய தெய்வந்தான் பெரிது என்றுகூறி ஏனையோர் தெய்வங்களை இகழ்பவன் பக்குவம் சிறிதும் எய்தாதவன், எல்லாத் தெய்வவழிபாடும் முடிவில் ஒன்றேயாம் என்னும் சமரசவுணர்வு கைவந்தவன் பக்குவம் மிக்கவன். தொடக்க நிலையில் பலரும் பல்வேறு தெய்வ வழிபாடுகளைக் கைக்கொள்ளுவராயினும், அனுபவ முதிர்ச்சி நிலையில் எல்லாம் ஒன்றேயாக முடியும் என்பது சுவாமிகளின் துணிவு.

சைவ வைணவ சமரசஞானம் கை வந்து இலங்கிய நம் சுவாமிகள், உடல் முழுதும் திருநீறு பூசியதுடன், சிலகாலம் இருதோள்களிலும் தென்கலை வடகலைத் திருநாமக் குறிகள் அணிந்து, கழுத்தில் உருத்திராக்கமாலையோடு துளசிமணி மாலை தாமரைமணி மாலைகளும் ஒருங்கேயணிந்து கொள்ளும் இயல்பினராக இருந்தனர். சைவம் 'வைணவம் சாக்தம்' காணபத்தியம் கௌமாரம் சௌரம் என்னும் அகச்சமயங்களும், சமணம் பௌத்தம் பார்சியம் சீக்கியம் இசுலாமியம் கிறித்துவம் என்னும் புறச்சமயங்களும் ஆகிய அனைத்தையும். உயர்வு தாழ்வு வேறுபாடுகள் கருதாமல், இவர் ஏற்றுப் போற்றி வந்தார்.

ஆதியிற் கவுமா ரத்தில்
அழுந்துபு கிடந்து பின்னர்
வேதியின் விதித்த ஆறு
விதிநெறிப் பொதுவன் ஆகி,
ஏதில்புன் நெறியோ ரேனும்
இரங்கும் நெஞ் சினரேல் அன்னோர்
ஓதிடும் தேவும் நமதே
உருவென உணர்ந்திட் டேனே.

சீவகாருணிய ஒழுக்கம்:

சுவாமிகள் தம்முடைய உயிர்போற்பெரிதும் வற்புறுத்திப் போற்றிய கொள்கை, சீவகாருணியம் ஆகும். பிற உயிர்களைக் கொல்லுதலும், அவற்றின் புலாலைப் புசித்தலும் ஆகிய இரண்டையும், சுவாமிகள் அறவே அருவருத்து வெறுத்துக் கடிந்துரைத்துள்ளனர். கொலை புலையிற்சாராமல் இரக்கம் மிக்க நெஞ்சம் உடையவராக இருப்பவர் யாவராயினும், அவர்கள் பெரியவர்கள். அத்தகையவர்கள் எந்த சமயத்தைச் சார்ந்து, எத்தெய்வத்தை வழிபடினும், அத்தெய்வங்களை யானும் வழிபட இசைவேன்' என்று சுவாமிகள் பாடுகின்றார்.

சுவாமிகள் சீவகாருணிய ஒழுக்கத்தினை உயிர்போலப் போற்றியவராதலின், தமது தல யாத்திரையில் திருவொற்றியூர் சென்றபோது அங்கு வட்டப்பாறை யம்மனுக்கும், பழநிக்குச் சென்ற போது அங்கே இடும்பனுக்கும் உயிர்ப்பலி நிகழ்வது அறிந்து, பெரிதும் வருந்திப் பின்வரும் அழகிய பாடல்களைப் பாடியருளினர்! அது

ஒற்றியூர்க் காளீ! உனக்கேனோ
ஊன் விருப்பம்?
வெற்றிமழு வோன் விருப்பு
வேண்டாமோ!
சிற்றுயிரைக்
கொள்வார்க்கும் இன்பம் கொடாதான்
அவன் கண்டாய்!
நல்வார்த்தை சொன்னேன் இந்நாள்
பாடும் அன்பர்போற்றும் பழநிப்
பதியில் நின்று
ஆடும் இடும்பன்! அறையக்கேள்!
–நீடும்

கொலைகண்டு மாமிசம்உட்
கொண்டுவக்க வேண்டாம்!
நிலைகண்டு மெய்யருளில் நில்

என்பதாகும். பலவிடத்து சுவாமிகள் சீவகாருணியத் தினைப் பறையறைந்து வற்புறுத்திப் பாடுவர்.

இந்நெறி நிற்பதால் வடலூராற்கும் அடியனேன் தனக்கும் இந்தப் பூதலத்தினர் போதும். ஊன் உண்ணாப் புதுமை செய்திடலே போதும். சாதல் எய்தினரை மீட்கும் தகை, இதில் தாழ்வேயாம்' என்று சுவாமிகள் குறிப்பிட்டிருப்பதும் உணரற்பாலது, இவற்றால், 'கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்லுவது என் இச்சை பராபரமே' என்ற தாயுமான சுவாமிகள் போலவே, நம் சுவாமிகளும் சீவகாருணிய நெறியினைப் பரப்புதலில் எல்லையில்லா இச்சையும் முயற்சியும் மேற்கொண்டிருந்தமை தெளியலாம்.

சுவாமிகளின் நூல்கள்:

முருகன் உபாசனையினால் சிறந்த கவிபாடும் திறம்பெற்று, 'வண்ணச் சரபம்' என விளங்கியவர் நம் சுவாமிகள், சுவாமிகள் இயற்றிய நூல்கள் பலப்பல. பாடிய பாடல்களோ ஏறத்தாழ நூறாயிரம் ஆகும் எனலாம்.

சுவாமிகளின் நூல்களிற் பெரிதும் இந்நாளிற் பரவியிருப்பது புலவர் புராணம் என்னும் நூல் ஆகும். தமிழில் இதற்கு முன்னர் இத்தகையதொரு நூல் தோன்றியதாகத் தெரியவில்லை. தமிழில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்துவகை இலக்கணங்களே இருந்து வந்தன.

சுவாமிகள் 'அறுவகை இலக்கணம்' என ஒன்று வகுத்துள்ளார்.

தொல்காப்பியம் முதலிய பழந்தமிழ் நூல்களில் 'செய்யுள் இயல்பு' ஓரளவு விளக்கப் பெற்றிருப்பினும், 'வண்ணச் செய்யுள்' குறித்துப் போதிய விளக்கங்கள் இல்லாமையின், சுவாமிகள் அதனை விரித்து விளக்கியருளினர்.

தில்லைத் திருவாயிரம், திருவாமாத்தூர்த் தலபுராணம், குருபரதத்துவம், மனுநெறித் திருநூல் முதலிய பற்பல நூல்களைச் சுவாமிகள் இயற்றியுள்ளனர். தாம் யாத்திரை சென்று தரிசித்து வணங்கிய தலங்களுக்கெல்லாம் பாடலும் பதிகமும் நூல்களும் மிகப்பல இயற்றியிருக்கின்றனர் நம் சுவாமிகள்!

முடிவுரை:

இத்தகைய நூல்களை யெல்லாம் கற்றுப் பயனடையவும், விழுப்புரத்திற்கடுத்துள்ள திருவாமாத்தூர் என்னும் தேவாரத் திருப்பாடல் பெற்ற சிவதலத்தின்கண் அமைந்துள்ள சுவாமிகளின் சமாதிக் கோயிலினைக் கண்டு வணங்கி நலமடையவும், நாம் அனைவரும் முற்படுவோமாக!

நன்றி

நா. ரா. முருகவேள்

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழின் விலை	ரூ. 10/-
ஓராண்டு சந்தா	ரூ. 120/-
ஐந்தாண்டு சந்தா	ரூ. 500/-
பத்து ஆண்டுச் சந்தா	ரூ. 1000/-
ஆயுட்காலச் சந்தா	ரூ. 1500/-

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்)	ரூ. 15,000/-
2. முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்)	ரூ. 10,000/-
3. பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்)	ரூ. 7,500/-
4. உட்புறம் முழுப்பக்கம்	ரூ. 5,000/-
5. உட்புறம் அரைப்பக்கம்	ரூ. 3,000/-

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர்.

அமைவிடம்:

தமிழ்நாட்டில், சென்னையிலிருந்து சுமார் 180 கி.மீ. தெற்கில் அமைந்துள்ள நகரம் கடலூர். இந்த நகரத்திலிருந்து மேற்கில் ஒரு கி.மீ. தொலைவில் திருப்பாதிரிப்புலியூர் என்னும் தலம் அமைந்துள்ளது. திருப்பாதிரிப்புலியூர். இத்தலத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் இறைவர் திருப்பாதிரிப் புலியூர் பாடலீஸ்வரர் பெருமான் ஆவார்.

நடுநாட்டுச் சிவதலங்கள் 22ல் இது 18வது தலமாகும். இத்தலத்திற்குப் பாதிரிப்புலிசை, கடைஞாழல், கன்னிக்காப்பு, கன்னிவனம், கன்னியம்பதி, ஆதிமாநகர், பாட்னா, பாடலிபுத்திரம் எனப் பல பெயர்கள் வழக்கில் இருந்துள்ளன. தென்னாட்டின் பாடலிபுத்திரம் எனவும் இந்நகர் அழைக்கப்பட்டது.

புலிக்கால்முனிவர் என வழங்கும் வியாக்ரபாதர் வழிபாடு செய்த ஐந்து புலியூர்களுள் இதுவும் ஒன்றாகும். இதன் ஆதி பெயர் கடைஞாழல் என்பதாகும். பின்னாளில் கடலுக்கு அருகில் அமைந்திருந்த பெருமைபெற்ற ஊராக விளங்கியதால் கடலூர் என வழங்கலாயிற்று. தலவிருட்சம் பாதிரிமரமாகையினாலும், புலிக்கால் முனிவர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம் என்பதாலுமே பாதிரிப்புலியூர் என இவ்விடம் பெயர் பெற்றதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இத்தலத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சிவபெருமானைப் பாடலீஸ்வரர், கன்னி வனநாதன். கடைஞாழலுடையபெருமான் சிவக்கொழுந்தீசன், உத்தாரேசன், பாடலநாதன், கரையேற்றும்பிரான் என பல பெயர்களால் புராணங்களில் அழைக்கப் படுகிறார். இந்நாளில் பெருமான் பாடலீசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

அம்பிகையை, பெரியநாயகி, தோகையம்பிகை, அருந்தவநாயகி, பிரஹந்நாயகி என பல பெயர்களால் புராணம் துதிக்கிறது. இத்தலத்தை தழைத்த பாதிரிப்புலியூர் எனவும் அழைப்பர். அம்பிகை பூசித்த போது இங்குள்ள மரம் பன்னிரண்டு வகையான மலர்களைப்

பூத்தது. இதனைத் தலபுராணம் பன்னிரு மலர்பூக்கும் பாதிரி என்று போற்றுகின்றது.

இறைவன், இறைவியர் திருக்கோயில்கள் தனித்தனியாக கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளன.

பிடாரி கோயில் என்கிற ஏழு மாதர் (சப்தமாதர்) கோயில், அம்மன் கோயில் வாயிலுக்கு முன்புறம் வடக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

ஐந்து திருச்சுற்றுகள் கொண்ட இத்திருக்கோயிலின் ஐந்தாம் சுற்று இராஜவீதியாக அமைந்துள்ளது.

பாதிரிமரங்கள் அடர்ந்த இடத்தில் இருந்ததால் இத்தலம் திருப்பாதிரிப்புலியூர் என பெயர் பெற்றது இத்தலத்தின் தலவிருட்சம் பாதிரி மரமாயிற்று. சுமார் 2000ம் ஆண்டுகட்கு மேல் பழமை வாய்ந்த பாதிரிமரம் தலவிருட்சமாக அமைந்துள்ளது. அஃது பட்டுப் போய் இருப்பதால் அதன்மீது செப்புத்தகடு வேய்ந்துள்ளனர் இத்திருக்கோயில் நந்தவனத்தில் அம்மரத்தின் வேர்கள் மூலம் புதிய பாதிரிமரமும் வளர்ந்துள்ளது.

சிவபெருமான் சமுத்திர ராஜனுக்கு மருமகனாக விளங்குவதால் இத்தலத்திற்கு அருகிலுள்ள தேவனாம்பட்டினத்துச் சமுத்திரம் பிரம்ம தீர்த்தமாகவும், கெடில நதி, தென்பெண்ணையாறு இவைகள் நதி தீர்த்தமாகவும்,பாலோடை (ஓடை) ஓடைத் தீர்த்தமாகவும் கங்கை நதியே தன்பாவத்தை போக்கிக் கொள்ள வந்து நீராடிய மகாசக்தி வாய்ந்த புனித தீர்த்தமான சிவகரதீர்த்தம் என்னும் குளமும் ஆகிய ஐவகை தீர்த்தங்கள் அமையப்பெற்ற திருத்தலம் இதுவாகும். இப்படி, கடல், நதி, ஓடை, குளம், கிணறு, ஆகிய ஐவகை தீர்த்தமும் இங்குள்ளது தனிச்சிறப்பாகும்.

ஒருசமயம் கயிலையில் இறைவனும், இறைவியும் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்தனர். பலமுறை ஆடியும் தோல்வி பரமனுக்கே. ஆனால் வெற்றி தனக்கே என சாதித்தார், அதனைப் பார்த்திருந்த பெருமானும் (மகாவிஷ்ணு) ஆட்டத்தினை கவனிக்கவில்லை என ஒதுங்கினார். கோபம் கொண்ட பிராட்டி முச்சுடரும் பொய் கூறா, எனவே இறைவன் திருக்கண்களை மறைப்பேன். வெற்றி என் பக்கமாயின் அவை ஒளிதராதொழிக! இறைவன் திறத்தே வெற்றி எனில் ஒளி விடுக! எனக்கூறிச் சிவபெருமானின் திருக்கண்களை தன்கரங்களால் மறைத்தார் உலகம் இருண்டது அனைத்து செயல்களும் நின்று போயின. இறைவனுக்கும், இறைவிக்கும் இடையே நேர்ந்த இந்நிகழ்ச்சி கணநேரமாக தேவர்க்கும் யாவர்க்கும் பலயுகங்கள் நீடித்தது. அதனால் அனைத்து தேவர்களும் கடமை ஆற்றாது நிற்க இறைவி

தன் செயலால் ஏற்பட்ட இன்னல்களை கண்டு மனம் வருந்தி தனக்கு கழுவாய் வேண்டினாள்.

இறைவன் இறைவியிடம் பூலோகம் சென்று 1008 சிவத்தலங்களில் பூசிக்கும்படியும் அவ்வாறு பூசிக்கையில் எந்த தலத்திற்கு செல்லும் போது உமது இடது கண்ணும் இடது தோளும் துடிக்கின்றதோ அந்த தலத்தில் எம்மைப் பூசித்து தவம் மேற்கொண்டால் அந்த தலத்திற்கு வந்து உம்மை ஆட்கொள்வேன் என்றும் கூறினார். அதேபோல் இறைவியும் பல தலங்களைப் பூசித்து இத்தலத்திற்கு வருகையில் இடது கண்ணும், இடது தோளும் துடித்ததால் இத்தலத்திலேயே தங்கி அருபமாக தவம் செய்தாள் (உருவம் இன்றி). அவளது தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் நேரில் தோன்றி அருள் புரிந்து திருமணம் செய்துகொண்டார்.

மேலும் இங்கு இறைவன் சித்தர்வடிவம் பூண்டு மக்களின் துன்பங்களை நீக்கிப் பல திருவிளையாடல்களைப் புரிந்துள்ளார்.

அகத்தியர், வியாக்ரபாதர், மங்கணமுனிவர், உபமன்னியர், ஆதிராசன் ஆகியோர் பூசித்து பேறு பெற்றுள்ளனர். இங்கே இறைவி தவமிருந்து இறைவனை அடைந்தார்.

பள்ளியறை இறைவன் திருக்கோயிலில் அமைந்து நாள்தோறும் இறைவியே பள்ளியறைக்கு எழுந் தருளுகின்றார் விநாயகர் தம்கரங்களில் ஆயுதமின்றிப் பாதிரிமலர்க் கொத்துகள் உள்ளதும் வேறெங்கும் காண முடியாது.

நமசிவாய பதிகம் பாடிக் கல்லையே தெப்பமாகக் கொண்டு அருங்கடலினின்றும் இத்தலத்திற் கருகில் உள்ள கரையேறவிட்ட குப்பத்தில் கரையேறியதுடன் தன்னைக் கரையேறவிட்ட பிரானைப் பற்றிப் பதிகம் அப்பர் அடிகள் பாடியுள்ளார். மேலும் அவர் தம் திருக்கரங்களால் வெட்டிய சிவகர தீர்த்தக்குளம் அமைந்துள்ளது.

அப்பர், திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார்களால் பாடல் பெற்றது. இத்தலத்தில் அருணகிரிநாதரும் முருகப் பெருமானை வழிபட்டுப் பாடல்

இயற்றியுள்ளார். தோன்றாத் துணைவராய் இருந்து அனைவரையும் இன்றும் வழிநடத்தும் எம்பெருமானின் திருவிளையாடல்கள் இன்றளவும் தொடர்ந்து நடைபெறுவதும் தனிச்சிறப்பாகும். அப்பரடிகளின் காலம் 7ம் நூற்றாண்டு ஆகும். அவருக்கு முன்பே சிறப்புப் பெற்றிருந்த இத்திருக்கோயில் சுமார் 2000 ஆண்டுகட்கு முற்பட்டது என அறியப்படுகிறது.

பராந்தக சோழன், முதலாம் இராஜராஜன், முதலாம் ராஜேந்திரன், இரண்டாம் ராஜேந்திரன், வீரராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன் விக்ரமசோழன் முதலானோர்கள் மற்றும் பல்லவமன்னர்கள், பாண்டிய மன்னர்கள் பலரும் திருப்பணி செய்தும், நன்கொடை அளித்தும் இத்திருக்கோயிலைப் பராமரித்து வந்துள்ளார்கள் என்பது இங்கே பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் மூலம் அறிகிறோம்.

சித்திரை வசந்த உற்சவம், வைகாசி விசாக பிரம்ம உற்சவம், அப்பர் கரையேறிய ஐதீக விழா, ஆடிப்பூர விழா, நவராத்திரி, ஆருத்ரா, தை அமாவாசை, மாசிமக கடலாட்டு விழா மற்றும் மகா சிவராத்திரி முதலிய விழாக்கள் சிறப்புடன் நடைபெறுகின்றன.

அப்பரடிகளை கல்லோடு கட்டி கடலில் இட்டபோது கல்லையே தெப்பமாக மாற்றி கரையேற வைத்த இந்தப் பெருமான் நம்மை வாழ்க்கைக் கடலில் மூழ்கிவிடாமல் காத்து கரையேற்றி வளமான வாழ்வை அளிப்பான் என்று உறுதியாக நம்பலாம்.

*

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர்	த. பிச்சாண்டி. இ.ஆ.ப., முதன்மை செயலர்/ ஆணையர் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை, சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13
ஆசிரியர்(கூ.பொ)	ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர்	குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை – 21 தொலைபேசி : 25967929

சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் 25.2.2009 அன்று கிராமக் கோயில் பூசாரிகளுக்கான அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகள் பற்றிய குறிப்பேடு வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக அடிகளார் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறையின் முதன்மை செயலர்/ ஆணையர் திரு.த.பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள், பூசாரிகள் நலவாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினர்கள் திரு.எஸ்.வேதாந்தம் அவர்கள், திரு.ஏ.கே.சௌந்தரராஜன் அவர்கள், திரு.நெ.இல.ஸ்ரீதரன் அவர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கிட,

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகள் பற்றிய குறிப்பேட்டினை பூசாரிகளுக்கு வழங்கி சிறப்புரையாற்றினார்.

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11

கயிலையே மயிலை! மயிலையே கயிலை!!

அருள்மிகு கற்பகாம்பாள் உடனாய கபாலீசுவரர் திருக்கோயில், திருமயிலை, சென்னை - 600 004. பங்குனிப் பெருவிழா அழைப்பிதழ் - 2009

எல்லா உலகங்களுக்கும் நாயகனாய், விறகில் தீயும், பாலில் படுநெய்யும்போல் எங்கும் நிறைந்த சிவபெருமான் தம்மை மெய்யன்பர்கள் வழிபடும் பொருட்டு, பல்வகைத் திருவுருவம் தாங்கித் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய தலங்களுள், தொண்டை நாட்டில் சென்னை பகுதியில் கடலைச் சார்ந்தும், உமாதேவியார் மயில் வடிவம் கொண்டு இறைவனை வழிபட்டதும் முருகவேள், நான்முகன், வேதம் (மறை) சுக்கிரன் (வெள்ளி) இராமர் ஆகிய இவர்கள் வழிபட்டு பேறு பெற்றதும் திருஞான சம்பந்தர் என்பைப் பெண்ணுருவாக்கி அருளியதும், வாயிலார் நாயனார் தோன்றி வழிபட்டு முக்தி பெற்றதும் திருவள்ளுவர் அவதரித்த சிறந்த புண்ணியத்தலமுமான திருமயிலை, கபாலீச்சரத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு கற்பகாம்பாள் உடனாய, கபாலீசுவர பெருமானுக்கு நடைபெறும் பங்குனிப் பெருவிழா நிகழ்ச்சிகளை கண்டு வணங்கி இருமை இன்பத்தையும் பெற்றுச் செல்லுமாறு வேண்டுகிறோம்.

நிகழ்ச்சி நிரல்

திரு விழா	2009 மார்ச்	திருவள்ளுவர் ஆண்டு 2040	கிழமை	காலை மணி	பகல் விழா	இரவு மணி	இரவு விழா
	30	பங்குனி 17	திங்கள்	12.15	கிராமதேவதை பூசை அருள்மிகு கோலவிழி அம்மன் சிறப்பு வழிபாடு	9.00	விநாயகர் உற்சவம் வெள்ளி மூஷிகவாகனம்
1	31	18	செவ்வாய்	5.30 6.00-7.30	கொடியேற்று மண்டபத்தில் இறைவன் எழுந்தருளல் கொடியேற்றம் பவழக்கால் விமானம்	10.00	அம்மை மயில் வடிவில் சிவபூசைக்காட்சி புன்னை மரம், கற்பக மரம், வேங்கை மரம் வாகனங்கள்
2	ஏப்ரல் 1	19	புதன்	9.30	சூரிய வட்டம்	9.00	சந்திர வட்டம், கிளி, அன்ன வாகனங்கள்
3	2	20	வியாழன்	5.55	அதிகார நந்தி காட்சி கந்தருவன், கந்தருவி, மூஷிகம் வெள்விடை வாகனங்கள் திருஞானசம்பந்தர் திருமுலைப்பால்விழா	9.00	பூதன், பூதகி, தாரகாசுர வாகனங்கள்
4	3	21	வெள்ளி	8.30	புருஷாமிருகம், சிங்கம், புலி வாகனங்கள்	9.00	நாகம், காமதேனு, ஆடு வாகனங்கள்
5	4	22	சனி	8.30	சவுடல் விமானம்	11.00	வெள்விடை பெருவிழாக்காட்சி
6	5	23	ஞாயிறு		பல்லக்கு விழா	10.30	ஐந்திருமேனிகள் யானை வாகனங்கள்
7	6	24	திங்கள்	5.30 6.30	இறைவன் திருத்தேருக்கு எழுந்தருளல் திருத்தேர் வடம் பிடித்தல்		தேரிலிருந்து இறைவன் திருக்கோயிலுக்கு எழுந்தருளல், ஐந்திருமேனிகள் விழா
8	7	25	செவ்வாய்	2.55	திருஞானசம்பந்தசுவாமிகள் எழுந்தருளல் - என்பை பூம்பாவையாக்கி அருளல் - வெள்ளி விமானத்தில் இறைவன் அறுபத்து மூன்று நாயன்மார்களோடு திருக்காட்சி		சந்திரசேகரர் பார் வேட்டை விழா,
9	8	26	புதன்		ஐந்திருமேனிகள் விழா,	6.30	இறைவன்இரவலர் கோலவிழா, ஐந்திருமேனிகள் விழா
10	9	27	வியாழன்		திருகூத்த பெருமான் திருக்காட்சி ஐந்திருமேனிகள் விழா, தீர்த்தவாரி	7.00 9.00-10.00	புன்னை மரத்தடியில் உமாதேவியார் மயிலுருவுடன் மாதேவரை வழிபடல் திருக்கல்யாணம் கயிலாய ஊர்தி. கொடியிறக்கம் சண்டேஸ்வரர் விழா நிறைவு
	10	28	வெள்ளி		உமாமகேஸ்வரர் தரிசனம்		பந்தம் பறி விழா
	11	29	சனி		விழா நிறைவு திருமுழுக்கு		விடையாற்றி தொடக்கம்

ம.தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்.,
துணை ஆணையர்/ செயல் அலுவலர்

டாக்டர் நல்லி என்.குப்புசாமி செட்டியார்
அறங்காவலர் குழுத்தலைவர்

விஜயா தாயன்பன், பி.ஆர்.தமிழரசன், பொழிச்சலூர் பி.வைத்தியநாத முதலியார்
அ.கிருஷ்ணமூர்த்தி, (முன்னாள் மாமன்ற உறுப்பினர்)
அறங்காவலர்கள்